# பாரதிதாசன்



# இத்திகடி

T. 18576
76
03

# ஆத்திசூடி

பொங்கல் வாழ்த்துக் குவியல்

இளையார் ஆத்திசூடி

பாரதிதாசன்

பூம்புகார் பதிப்பகம்
63, பிராட்வே
சென்னை-600 108

விலை. ரூ. 8-25

பூம்புகார் வெளியீடு எண் : 135

முதற் பதிப்பு : ஏப்பிரல், 1980.

மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 1989

**உரிமை :** புரட்சிக் கவிஞரின் தலைமகள் சரசுவதி கண்ணப்பன்; மகன் மன்னர் மன்னன்; இளைய மகள் வசந்தா தண்டபாணி ஆகியோர் உரிமை இந் நூல். எவர் இந்த வகையிலும்-வடிவத்திலும் இந்த நூலின் வரிகளை எடுத்தாள விரும்பினாலும் உரிமை உடையவர்களிடம் முன் இசைவு பெறுதல் வேண்டும்.

---

அச்சிட்டவர்கள் : பூம்புகார் பதிப்பகம், சென்னை—600 108.

## பதிப்புரை

நம் குழந்தைகட்கு ஊட்டும் அறிவே, நானிலத்து ஊட்டும் அறிவாகும். இந்தப் பேருண்மையை உலகில் முதன்முதல் உணர்ந்தவர்களும் உணர்த்தியவர்களும் தமிழர்களே.

எழுதாத இலக்கியமாகியப் பழமொழிகளின் சுருக்க வடிவமே நீதி மொழிகள். வாழ்வின் பட்டறிவு முத்துக்கள் ஔவையாரிடம் 'முத்தார' மாகத் தொகுக்கும் வகையில் ஒளிர்கின்றது.

திண்ணைப் பள்ளியில் தொடங்கி இன்று அனைத்து வாய்ப்புள்ள தெருப் பள்ளிவரை ஔவையின் ஆத்திசூடி இளநெஞ்சங்களில் கல்வெட்டுகளாக பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன.

இருபதாம் நூற்றாண்டின் ஆத்திசூடி எண்ணற்ற ஆய்வுகளில் புகுந்து ஒளிர்ந்தபோது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரிடம் புகுந்து **புதிய ஆத்திசூடி** கண்டது.

பாரதியின் ஒப்பற்ற தாக்கம் பெற்று பாரதிதாசன் தம் பள்ளி மாணவர்க்கு ஐம்பது ஆண்டுகட்கு கற்பித்தெழுதிய **பாரதிதாசன் ஆத்திசூடி**

1948ல் வெளியிடப்பட்டது. அவரே அதற்கு உரையும் எழுதினார்.

புரட்சி நோக்கும், புதுமைப் போக்கும் கொண்ட இந்நூலைப் பூம்புகார் பிரசுரம் வெளியிடுவதில் மகிழ்கிறது.

இத்துடன் இளையோர் ஆத்திசூடியும், பொங்கல் வாழ்த்துக் குவியலும் இணைக்கப்பட்டுள்ளன.

இதனை வெளியிடுவதில் துணைபுரிந்த டாக்டர் ச. சு. இளங்கோ, எம்.ஏ., பிஎச்.டி., (பல்கலைக் கழக நிதிக்குழுவின் கீழ் ஆய்வு புரிபவர்) அவர்கட்கு நன்றியுடையோம்.

— **பூம்புகார் பதிப்பகம்**

## பயன் விருந்து . . .

**1938** ஆம் ஆண்டில் 'தமிழரசு' என்னும் இதழுக்குத்தொடர்ந்து தமது படைப்புக்களை வழங்கிக் கொண்டிருந்த எந்தையார், தாம் எழுதிய 'சௌமியன்' எனும் நாடகத்தினை வெளியிடச் செய்தார். நூலின் அச்சு வேலை நடந்து கொண்டிருந்தபோது இரண்டாம் உலகப் போர் மூண்டது, நூல் வெளியிடப்படாமல் நின்றுபோயிற்று.

1946ஆம் ஆண்டில் நிதிஅளிப்பு விழா நிகழ்ந்த பின்னர், தமக்கெனச் சிறிய அச்சகம் ஒன்றினை நிறுவி, அதனைச் சென்னை, தங்கசாலை, வைத்தியநாத முதலி தெரு, டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் வீட்டிலேயே அமைத்தார்.

சித்த மருத்துவப் பேரறிஞரான மாசிலாமணி முதலியார் இல்லமே எந்தையார் எப்போதும் தங்கியிருக்கும் வாய்ப்பினை வழங்கியது.

1946ஆம் ஆண்டில, முன்பு, நின்றுபோன 'சௌமியன்' நூலை வெளியிடும் வேலை மீண்டும் தொடங்கப்பட்டது.

வழ வழப்புத்தாளில் மேலட்டை அச்சிடும் போது, தாளின் ஒரு சிறு துண்டுப்பகுதி எஞ்சி விட்டது.

அந்தத் துண்டுகளைக் கொணர்ந்து கவிஞரின் மேசை மீது அடுக்கினான் அச்சகப் பணியாளன். 2 அங்குல அகலத்தில் 12 அங்குல நீளமுள்ள அந்தத் துண்டுத் தாளினை எடுத்தெடுத்துப் பார்த்து வியந்தார் கவிஞர்.

மறுநாட் காலை—

சிறுசிறு கவிதை வரிகள் எழுதப்பட்டிருந்தன. தம் கையாலேயே அழகுற 'ஆத்திசூடி' எனவும் தலைப்பிட்டு எழுதியிருந்தார். அதே சிறிய வழவழப்புத்தாளின் துண்டுகளில் அச்சிட்டு முடித்த நூலே ''ஆத்திசூடி''

கவிஞரின் முற்போக்குக் கருத்துக்களின் படப் பிடிப்பாகத் துலங்கும் ''ஆத்திசூடி'' ஔவையார், பாரதியார் இயற்றியுள்ள ஆத்தி சூடிகளினின்று பெரும்பகுதியும் வேறு பட்டுள்ளது.

சுருக்கமாக — தெளிவாக — ஆணித்தரமாகத் தம் கருத்தைக் கூறுவதில் முழுவெற்றி கண்ட பாவேந்தரின் இந்த ஆத்திசூடியின் ஆழ்ந்த கருத்துக்களைத் தமிழ் நெஞ்சம் நுணுகிப் படித்து உண்மை ஓர்க.

அவ்வப்போது பொங்கல் விழாக் காலங்களில் எழுதிய வாழ்த்துக்களைத் திரட்டி அளிக்கிறது ''பொங்கல் வாழ்த்துக் குவியல்''.

தமிழ்ச்சுவை பொங்கலின் அமுதச்சுவை யோடு போட்டியிடுவதைப் படித்து இன்புற லாம்.

மூட நம்பிக்கையின் அடிப்படையில் அமையும் எந்த விழாவையும் தமிழர்கள் கொண்டாட லாகாது. இயற்கையோடு இயைந்த விழா தமிழ்த் திருநாளான பொங்கல் விழா.

இக்கருத்தினை ஏறத்தாழ 40 ஆண்டுகட்கு முன்பு எடுத்துக் கூறியபோது எதிர்ப்புக் கணை கள் தொடுக்கப்பட்டன. தமிழ்ப்பண்பாட் டிற்கு ஒத்த கருத்தமைந்த பொங்கல் விழா வைப்பற்றிய பாடல்களை எழுதி எழுதித் தம் கருத்துக்கு வலிமை சேர்த்தார் கவிஞர்.

இன்னொன்றும் சொல்லி வைக்கிறேன். எங் கள் வீட்டில் பொங்கல் விழாவைத்தவிர வேறு எந்தக் கொண்டாட்டமும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் நடந்ததில்லை.

ஆம். தாம் வலியுறுத்தும் கருத்துக்களுக்குச் செயல்வடிவம் தந்து வாழ்ந்து காட்டிய அந்த ஆற்றல் மிக்க கவிஞரின் சுவைமிக்க படைப்பு களைத்தான் இந்த நூல் உங்கட்கு வழங்கு கிறது.

இதனைப் படைக்க உதவி செய்யும் பூம்புகார் நிறுவனத்துக்கு நன்றி கூறுவோம்.

புதுச்சேரி
23—2—80

— மன்னர்மன்னன்

பாவலர் வாழ்க்கை பயன்மரம், ஊருணி.
யாவரும் கொள்வீர் இனிது.

## பாவேந்தர் வாழ்க்கைக் குறிப்புகள்

1891 — ஏப்ரல் 29, புதன் இரவு 10-15 மணிக்குப் புதுவையில் சுப்புரத்தினம் பிறந்தார். தந்தை கனகசபை, தாய் இலக்குமி. உடன் பிறந்தோர்: தமையன் சுப்பராயன், தமக்கை சிவகாமசுந்தரி, தங்கை இராசாம்பாள்.

1895 — ஆசிரியர் திருப்புளிசாமி அய்யாவிடம் தொடக்கக் கல்வி. இளம் வயதிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்றார். பாட்டிசைப்பதிலும் நடிப்பதிலும் ஊரில் நற்பெயர் பெற்றார். பத்தாம் வயதிலேயே சுப்புரத்தினத்தைப் பெற்றதால் புகழ் பெற்றது புதுவை.

1908 — புதுவை அருகில் உள்ள சாரம் முதுபெரும் புலவர் (மகா வித்துவான்) பு. அ. பெரியசாமியிடமும், பின்னர், பெரும்புலவர் பங்காரு பத்தரிடமும், தமிழ் இலக்கண-இலக்கியங்களையும், சித்தாந்த-வேதாந்த பாடங்களையும் கசடறக் கற்றார். மாநிலத்திலேயே முதல் மாணவராகச் சிறப்புற்றார். புலவர் சுப்புரத்தினத்தை, வேணு (வல்லூறு) நாயகர் வீட்டுத் திருமணத்தில் பாரதியார் காணும் பேறு பெற்றார். பாரதியாரின் தேர்வுத் 'தராசி'ல் நின்றார்; வென்றார். நட்பு முற்றியது; பாரதியாரின் எளிய தமிழ், புலமை மிடுக்கேறிய சுப்புரத்தினத்தைப் பற்றியது.

1909 — கல்வி அதிகாரி கையார் உதவியால், காரைக்கால் சார்ந்த நிரவியில் ஆசிரியப் பணி ஏற்றல்.

1910 — வ.உ.சி.யின் நாட்டு விடுதலை ஆர்வத்தால் கனிந்திருந்த புலவர்—பாரதியார், வ.வே.சு., டாக்டர். வரதராசுலு, அரவிந்தர் போன்றோர்க்குப் புகலிடம் அளித்தல், தம் பெற்றோர்க்குத் தெரியாமல்

மேல் துண்டில், வடித்த சோறு கொடுத்தல். ஒரோர் அமையங்களில் செலவுக்குப் பணம் தருதல். காவல் நாய்களின் வேட்டையிலிருந்து தப்ப உதவல். பாரதியாரின் 'இந்தியா' ஏட்டை மறைமுகமாகப் பதிப்பித்துத் தருதல். ஆஷ் கலெக்டரைச் சுட்ட துப்பாக்கி பாவேந்தர் அனுப்பியதே.

**1916** — தந்தையார் (**23—1—16**) இயற்கை எய்தல்.

**1918** — பாரதியாருடன் நெருங்கிப் பழகிய பழக்கத்தால், சாதி, மதம் கருதாத தெளிந்த உறுதியான கருத்துகளால் ஈர்ப்புற்றுப் புலமைச் செருக்கும் மிடுக்கும் மிகுந்த நடையில் எழுதும் தேசிய, தெய்வப் பாடல்களைப் பழகு தமிழில் எழுதுதல். புதுவை, தமிழக ஏடுகளில், புதுவை. கே. எஸ். ஆர்; K. S. R., கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், கே. எஸ். பாரதிதாஸன் என்ற பெயர்களில், பாடல், கட்டுரை, கதை, மடல்கள் எழுதுதல், 10 ஆண்டுக் காலம் பாரதியார்க்கு உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும் தோழனாய் இருந்தார்.

**1919** — திருபுவனையில் ஆசிரியராக இருக்கையில் பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயல்பட்டார் என்று குற்றம் சாட்டி $1\frac{1}{4}$ ஆண்டு சிறை பிடித்த அரசு, தவறுணர்ந்து விடுதலை செய்தது. வேலை நீக்க, வழக்கில் புலவர் வென்று மீண்டும் பணியில் சேர்தல்.

**1920** — இந்திய விடுதலை அறப்போராட்டத்தில் பங்கேற்றல். புவனகிரி பெருமாத்தூர் பரதேசியார் மகள் பழனி அம்மையை மணத்தல். தம் தோளில் கதர்த் துணியைச் சுமந்து தெருத் தெருவாய் விற்றல்.

**1921** — செப்டம்பர் **19**—தலைமகள் சரசுவதி பிறப்பு. (**12—11—21**) பாரதியார் மறைவு.

**1922** — K. S. பாரதிதாஸன் என்ற புனைபெயரைத் தொடர்ந்து பயன்படுத்தி, தேச சேவகன்; 'துய்ப்ளேச்சு', 'புதுவை கலைமகள்' 'தேசோபகாரி' 'தேச பக்தன்' 'ஆனந்தபோதினி' 'சுதேசமித்திரன்'

**இதழ்களில் தொடர்ந்து பாடல், கட்டுரை, கதை கள் எழுதுதல்.**

1924 — சோவியத்நாட்டு மாவீரர் இலெனின் இழப்பிற்குப் பாடல்.

1926 — **ஸ்ரீ மயிலம் சுப்ரமணியர் துதியமுது**-நூலால் சிந்துக் குத் தந்தையாதல்.

1928 — நவம்பர்-3, கோபதி (மன்னர்மன்னன்) பிறப்பு. தன்மான (சுயமரியாதை) இயக்கத்தில் பெரியார் ஈ. வே. ராவுடன்இணைதல். தாமும் தம் குடும்ப மும் பகுத்தறிவுக் கொள்கையை மேற்கொள்ளல். குடும்பத் திருமணங்களில் தாலியைத் தவிர்த்தல்.

1929 — 'குடியரசு', 'பகுத்தறிவு' ஏடுகளில் பாடல், கட் டுரை, கதை எழுதுதல்; குடும்பக் கட்டுப்பாடு பற்றி இந்தியாவிலே முதன்முதல் பாட்டெழுதிய முதல் பாவலர் என்ற சிறப்புப் பெறல்.

1930 — பாரதி, புதுவை வருகைக்கு முன்னும் பின்னும் பாடிய, **சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்; தொண்டர் நடைப்பாட்டு; கதர் இராட்டினப்பாட்டு** நூல் வடி வில் வெளியிடப்பட்டன. தொடர்ந்து **சஞ்சீவி பர்வதத்தின் சாரல்; தாழ்த்தப்பட்டார் சமத்துவப் பாட்டு** நூல்களை ம. நோயேல் வெளியிடல். டிசம்பர் 10-ல் 'புதுவை முரசு' கிழமை ஏட்டின் ஆசிரியர் பொறுப்பேற்றல்.

1931 — 'புதுவை முரசு' (5-1-31) ஏட்டில் செவ்வாய் உலக யாத்திரை-கட்டுரை வரைதல். **சுயமரியா தைச் சுடர்** என்ற 10 பாடல்களைக் கொண்ட நூலை 'கிண்டற்காரன்' என்றபெயரில் வெளியிடல். (குத்தூசி குருசாமிக்கு இந்நூல் படைப்பு) 18-8-31 இரண்டாம் மகள் வசந்தா (வேனில்) பிறப்பு. பள்ளி ஆண்டு விழாவில் 'சிந்தாமணி' என்ற முத் தமிழ் நாடகம் எழுதி இயக்குதல்.

1932 — **வாரிவயலார் வரலாறு அல்லது கெடுவான் கேடு நினைப்பான்**—புதினம் வெளியிடல். வெளியார்

நாடகங்கட்கும், தன்மான, பொதுவுடைமைக் கூட்டங்களுக்கும் பாட்டெழுதித் தருதல்.

**1933** — ம. சிங்காரவேலர் தலைமையில் சென்னை ஒயிட்சு நினைவுக் கட்டடத்தில் (31–1–33) நடந்த நாத்திகர் மாநாட்டில் கலந்துகொண்டு வருகைப் பதிவேட்டில் 'நான் ஒரு நிரந்தரமான நாத்திகன்' என்று எழுதிக் கையெழுத்திடல்.

**1933** — மூன்றாம் மகள் ரமணி பிறப்பு

**1934** — மாமல்லபுரத்திற்கு முழுநிலா இரவில் தோழர் ப. ஜீவானந்தம், குருசாமி, குஞ்சிதம், நயினா சுப்பிரமணியம், மயிலை. சீனி. வேங்கடசாமி, மாயூரம் நடராசன், சாமி சிதம்பரனார், எஸ். வி. இலிங்கம், நாரண துரைக்கண்ணனுடன் படகில் செல்லல்; 'மாவலிபுரச் செலவு,—பாடல் பிறந்தது. 9-9-34-ல் இரணியன் அல்லது இணையற்ற வீரன் நாடகம் பெரியார் தலைமையில் நடைபெறல். (குருசாமி இரணியன்-திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம்—பிரகலாதன்)

**1935** — இந்தியாவின் முதல் பாட்டேடான—'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' தொடக்கம். இதற்கு உறுதுணையாக இருந்தவர். எஸ். ஆர். சுப்பிரமணியம் (சர்வோதயத் தலைவர்.)

**1936** — பெங்களூரில் பதினான்கு நாள் தங்கி (1-4-36) 'தேசிங்குராஜன்' வரலாற்றை அட்கின்சு குழுமத்தார்க்கு 'இஸ் மாஸ்டர் வாய்ஸ்' இசைத்தட்டுகளில் பதித்தல்.

**1937** — **புரட்சிக்கவி**—குறுங்காவியம் வெளியிடல். 'பாலாமணி அல்லது பக்காத் திருடன்' திரைப்படத்திற்குக் கதை, உரையாடல், பாடல் எழுதுதல். இதில் நடித்தவர்கள்: தி. க. சண்முகம் உடன்பிறந்தோர் அனைவரும்.

**1938** — **பாரதிதாசன் கவிதைகள்** முதல் தொகுதியைக் குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி வெளியிட்

டனர். பொருளுதவி செய்தவர் கடலூர் தி. கி. நாராயணசாமி (நாயுடு). தமிழிலக்கியத்திலேயே பெரும் புரட்சியை உண்டாக்கியதால், பெரியார், ''தன்மான இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர்'' என்று பாராட்டினார். டாக்டர். மாசிலாமணியார் நடத்திய 'தமிழரசு' இதழில் தொடர்ந்து எழுதுதல். **தமிழுக்கு அமுதென்று பேர்** என்ற பாடலை அச்சு கோத்தவர் பின்னாளில் சிறப்புற்ற எழுத்தாளர் 'விந்தன்'.

1939 — 'கவி காளமேகம்'—திரைப்படத்திற்குக் கதை—உரையாடல் பாடல் எழுதுதல். **இரணியன் அல்லது இணையற்ற வீரன்** நூல் வடிவில் வருதல்.

1941 — **எதிர்பாராத முத்தம்**—காவியம். காஞ்சி பொன்னப் பாவால் வானம்பாடி நூற்பதிப்புக் கழகத்தில் வெளியிடல். இதற்கு மேலட்டை ஓவியம் இராய் சௌத்திரி.

1942 — **குடும்பவிளக்கு I** வெளியிடல். இந்தியப்போராட்ட எழுச்சியை மறைமுகமாக ஊக்குவித்தல். இரண்டாம் உலகப்போரை—இட்லரை எதிர்த்தல். பல ஏடுகட்கும் எழுதுதல்.

1943 — **பாண்டியன் பரிசு**—காவியம் வெளியிடல்.

1944 — பெரியார் முன்னிலையில் தலைமகள் சரசுவதி திருமணம். மணமகன் புலவர் கண்ணப்பர். 'இன்ப இரவு' (புரட்சிக்கவி) முத்தமிழ் நிகழ்ச்சி அரங்கேற்றம். **இருண்ட வீடு, காதல் நினைவுகள், நல்ல தீர்ப்பு,** (நாடகம்) **அழகின் சிரிப்பு** ஆகிய நூல்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வெளியிடல். 'சதிசுலோசனா' என்ற திரைப்படத்திற்குக் கதை, உரையாடல், பாட்டு எழுதுதல். **குடும்ப விளக்கு II** வெளியிடல், செட்டி நாடு முழுதும் இலக்கியச் சொற்பொழிவு நடத்திப் பகுத்தறிவு இயக்கத்தைக் காலூன்றச் செய்தல். கலைவாணர் என். எஸ்.கே.வுக்காக 'எதிர்பாராத முத்தம்'—நாடகமாகத் தீட்டித் தருதல். 'கற்கண்டு' 'பொறுமை கடலினும் பெரிது' இணைத்து எள்ளல் நூல் வெளியிடல்.

1945 — புதுவை, 95, பெருமாள் கோயில் தெரு வீட்டை வாங்குதல். **தமிழியக்கம்** (ஒரே இரவில் எழுதியது), **'எது இசை'** நூல்கள் வெளியிடல்.

1946 — 'முல்லை' இதழ் தொடங்கப்பட்டது. **அமைதி**— ஊமை நாடகம் வெளியிடல். (29-7-46) பாவேந்தர் 'புரட்சிக்கவி' என்று போற்றப்பட்டு ரூ. 25000—கொண்ட பொற்கிழியை, நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பொன்னாடை போர்த்தி, அறிஞர் அண்ணா திரட்டித் தந்தார். தமிழகப் பேரறிஞர்கள் அனைவரும் வாழ்த்திப் பேசினர். 8-11-46-ல் முப்பத்தேழாண்டு தமிழாசிரியர் பணிக்குப்பின் பள்ளியிலிருந்து ஓய்வு பெறுதல்.

1947 — புதுக்கோட்டையிலிருந்து **குயில்** 1, 2 மாத வெளியீடு. **'சௌமியன்'** நாடக நூல், **பாரதிதாசன் ஆத்திசூடி** வெளியிடுதல், சென்னையில் 'குயில்' இதழ். 'ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி' திரைப்படக் கதை, உரையாடல், பாட்டுதீட்டல். **இசையமுது** வெளியிடல், புதுவையிலிருந்து 'குயில்' ஆசிரியர்—வெளியிடுபவர். **'கவிஞர் பேசுகிறார்'** சொற்பொழிவு நூல்.

1948 — **காதலா கடமையா?** காவியம்; **முல்லைக்காடு, இந்தி எதிர்ப்புப் பாடல்கள், படித்த பெண்கள்** (உரை நாடகம்) **கடல்மேற் குமிழிகள்** காவியம்; **குடும்ப விளக்கு III; திராவிடர் திருப்பாடல், அகத்தியன் விட்ட கரடி** நூல் வெளியிடல். 'குயில்' மாத ஏட்டிற்குத் தடை; நாளேடாக்கல். **கருஞ் சிறுத்தை** உருவாதல்.

1949 — **பாரதிதாசன் கவிதைகள்** 2ஆம் தொகுதி; **சேர தாண்டவம்** (முத்தமிழ் நாடகம்); **தமிழச்சியின் கத்தி** காவியம், **ஏற்றப் பாட்டு** வெளியிடல்.

1950 — **குடும்ப விளக்கு IV; குடும்ப விளக்கு V** வெளியிடல்.

1951 — செப்டம்பர் 15-ல் வேனில் (வசந்தா தண்டபாணி) திருமணம் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடந்தது. **அமிழ்து எது; கழைக் கூத்தியின் காதல்**—வெளியிடல்.

அறுபதாண்டு மணிவிழா - **திருச்சியில் நிகழ்வுறல்.**

*1952* — 'வளையாபதி' திரைப்படம் கதை, உரையாடல் பாட்டு. **இசையமுது** இரண்டாம் தொகுதி வெளியிடல்.

*1954* — **பொங்கல் வாழ்த்துக் குவியல்; கவிஞர் பேசுகிறார்** சொற்பொழிவு நூல் வெளிவரல், குளித்தலையில் ஆட்சி மொழிக் குழுவிற்குத் தலைமை ஏற்றல்.

*1954* — 7-2-1954 மூன்றாம் மகள் ரமணி-சிவசுப்ரமணியம் திருமணம் இராசாக்கண்ணனார் தலைமையில் நடந்தது.

*1955* — புதுவைச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றியுற்று அவைத் தலைமை ஏற்றல். சூன் 26-ல் மன்னர் மன்னன்—மைசூர் வீ. சாவித்திரி திருமணம். கோவை.அ. அய்யாமுத்து தலைமை. **பாரதிதாசன் கதைகள், பாரதிதாசன் கவிதைகள்**—மூன்றாம் தொகுதி வெளியிடல்.

*1956* — **தேனருவி**—இசைப்பாடல்கள் வெளியிடல்.

*1958* — **தாயின்மேல் ஆணை; இளைஞர் இலக்கியம்** வெளியிடல். தமிழகப் புலவர் குழுவின் சிறப்புறுப்பினராதல். 'குயில்' கிழமை ஏடாக வெளிவருதல்.

*1959* — **பாரதிதாசன் நாடகங்கள்; குறிஞ்சித் திட்டு** காவியம் வெளியிடல்; **பிசிராந்தையார்** முத்தமிழ் நாடகம் தொடர்தல்; 1-11-59 முதல் திருக்குறளுக்கு **வள்ளுவர் உள்ளம்** என்ற உரை விளக்கம் எழுதுதல்.

*1961* — சென்னைக்குக் குடிபெயர்தல். பாண்டியன் பரிசு—திரைப்படம் எடுக்கத் திட்டமிடல். செக் நாட்டு அறிஞர் பேரா. கமில்சுவலபில் செக் மொழியில் பெயர்த்த பாவேந்தரின் பாடல்களைக் கொண்ட நூலைப் பெறுதல். ஜஸ்டிஸ். எஸ். மகராசன் நட்புறவு.

*1962* — சென்னையில் மீண்டும் 'குயில்' கிழமை ஏடு. (15-4-62) அனைத்துலகக் கவிஞர் மன்றத்தோற்றம், **கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா.** வெளியிடல். தமிழ் எழுத்தாளர் சங்கம் சார்பில் இராசாசி பொன்னாடை அணிவித்துக் கேடயம் வழங்கல்.

1963 — தோழர் ப. ஜீவானந்தம் மறைவு குறித்துப் 'புகழ் உடம்பிற்கு புகழ்மாலை' பாடல் எழுதுதல். சீனப் படையெடுப்பைஎதிர்த்துஅனைத்திந்தியமக்களை வீறு கொண்டெழப் பாடல்கள் எழுதுதல், **பன் மணித்திரள்** நூல் வெளியீடு. 72-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா. வழக்கறிஞர் வி. பி. இராமன் தலைமையில் நடைபெற்றது. 'பாரதியார் வர லாறு' திரைப்படம் எடுக்கத் திட்டமிட்டு எழுதி முடித்தல். இராசிபுரத்தில் புலவர் அரங்கசாமி கூட்டிய கவிஞர்கள் மாநாட்டில் தலைமைஏற்றல்.

1964 — பாரதியார் வரலாற்றுத் திரைப்படத்திற்குத் தீவிர முயற்சி. சென்னை பொது மருத்துவ மனையில் ஏப்ரல் 21-ல் இயற்கை எய்தல். மறுநாள் புதுவை கடற்கரையில் உடல் அடக்கம். வாழ்ந்த காலம் 72 ஆண்டு 11 மாதம் 28 நாள்.

1965 — ஏப்ரல் 21. புதுவை கடற்கரை சார்ந்த பாப்பம்மா கோயில் இடுகாட்டில் பாரதிதாசன் நினைவு மண்டபம், புதுவை நகராட்சியினரால் எழுப்பப் பட்டது.

1968 — உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது சென்னை கடற்கரையில் பாவேந்தர் உருவம் நாட்டப் பெறல்.

1970 — மார்ச். கவிஞரின் 'பிசிராந்தையார்' நாடக நூலுக்கு சாகித்ய அகாதமி ரூ. 5000 பரிசு வழங் கியது.

1970 — சனவரி—ரமணி மறைவு.

1971 — ஏப்ரல் 29 பாவேந்தரின் பிறந்தநாள் விழா புதுவை அரசு விழாவாகக் கொண்டாடப் பெற் றது. ஒவ்வோராண்டும் அரசு விழா நிகழ்கிறது. பாவேந்தர் வாழ்ந்த பெருமாள் கோயில்தெரு 95ஆம் எண் இல்லம் அரசுடைமையாயிற்று. அங்கே புரட்சிக் கவிஞர் நினைவு நூலகம்—காட் சிக் கூடம் நடந்து வருகிறது.

1972 — ஏப்ரல் 29, பாவேந்தரின் முழு உருவச்சிலை புதுவை அரசினரால் திறந்து வைக்கப்பெற்றது.

1979 — 'கடல் மேற்குமிழிகள்' காப்பியத்தின் பிரஞ்சு மொழியாக்கம் வெளியிடப்பெறல்.

— **மன்னர் மன்னன்**

# பாரதிதாசன் ஆத்திசூடி

(உரை)

## பாயிரம்

நவில் இனப் பற்றும், நாட்டுப் பற்றும்
வையப் பற்றை வளர்க்கும் நோக்கத்தன
இல்லையாயின் இன்றிவ் வுலகில்
தொல்லை அணுக்குண்டு, தொகு கொலைக் கருவி
பொல்லா நச்சுப் புகைச்சல் இவற்றை
அகற்றல் எப்படி? அமைதி யாங்ஙனம்?
உலகில் பொதுவாட்சி ஒன்றே ஒன்று
நிலவுதல் கருதி நிகழ்த்திய இந்நூல்
ஆத்திசூடி போறலின்
ஆத்திசூடிஎன் றடைந்தது பெயரே.

உரை: நவில்-சிறப்பித்துச் சொல்லுகின்ற, இனப் பற்றும்-தன் இனப்பற்றும், நாட்டுப் பற்றும்-தன் நாட்டின்மேல் உண்டாகிய பற்றும், வையப்பற்றை -உலகின் மேல் வைக்கும் பற்றை, வளர்க்கும் நோக்கத்தன - வளர்க்கும் நோக்கமுடையவை, இல்லை ஆயின்-இல்லாவிட்டால், இன்று இவ்வுலகில்-இந் நாளில் இந்த உலகில், தொல்லை அணுக்குண்டு-தொல்லைதரும் அணுக்குண்டும், தொகுகொலைக் கருவி-சேர்க்கின்ற துப்பாக்கி முதலிய ஆயுதங் களும், பொல்லா நச்சுப் புகைச்சல்-பொல்லாதன ஆகிய நச்சுப் புகையும், இவற்றை-ஆகிய இவற்றை, அகற்றல் எப்படி-உலகை விட்டு

ஒழிப்பது எப்படி முடியும்? அமைதியாங்ஙனம்-உலக அமைதி எவ்வாறேற்படும்? உலகில் பொது வாட்சி ஒன்றே ஒன்று-உலகில் ஒரு தனிப் பொது வான ஆட்சி, நிலவுதல்கருதி-நிலைபெற வேண் டும் என்பதை எண்ணி, நிகழ்த்திய இந்நூல்-சொல்லியதான இந்த நூல், ஆத்திசூடி போறலின்-ஔவை, ஆத்திசூடி போன்று இருந்த லால், ஆத்திசூடி என்று - ஆத்திசூடி என, அடைந்தது பெயரே-பெயர் அடைந்தது.

கருத்துரை: உலகுக்கு ஒரேயொரு தனியாட்சி ஏற்பட வேண்டும் என்ற கருத்தில் இயற்றிய இந்த நூல், ஔவை ஆத்திசூடி போல் இருத்த லால் ஆத்திசூடி என்னும் பெயரை அடைந்தது.

ஆய்வுரை: பெயரே-ஏ ஈற்றசை, இந்நூல்-எழுவாய், அடைந்தது - பயனிலை, பெயர்-செயப்படுபொருள்.

## 1. அனைவரும் உறவினர்

உரை: அனைவரும்-உலகிலுள்ள எல்லோரும், உறவினர்-உறவினராவார்.

கருத்துரை: உலகிலுள்ள மக்கள் யாவரும் உற வினர்.

ஆய்வுரை: அனைவரும் எழுவாய், உறவினர் பயனிலை. இதில் செயப்படுபொருள் இல்லை.

## 2. ஆட்சியைப் பொதுமை செய்

உரை: ஆட்சியை-பல நாடுகளிலும் நிறுவப்பட் டுள்ள ஆட்சி அனைத்தையும், பொதுமை செய்-பொதுவான ஒரே ஆட்சி ஆக்கு.

கருத்துரை: உலகுக்கு ஒரே ஆட்சி வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய் செய்-பயனிலை, ஆட்சி-செயப்படுபொருள்.

## 3. இசை மொழி மேலதே

உரை: இசை-இசை (இராகம்) மொழி-அது வரும் மொழியினால், மேலதே-மேன்மை யடைவது.

கருத்துரை: இசையானது அது பெற்று வரும், சொற்களினால்தான் மேன்மையடையும்.

ஆய்வுரை: ஏ-ஈற்றசை; இசை-எழுவாய்; மேலது-பயனிலை; மொழி-மூன்றாம் வேற்றுமைத் தொகை.

சிலர் குழல் யாழ் முதலியவைகளின் இசையில் மொழியில்லாவிடினும் அவ்விசையே தனியாக மக்கட்கு இன்பந்தரவில்லையா என்று கேட்பார்கள். முதலில் சொல்லொடு தோன்றிச் செல்வாக்குப் பெற்றதால்தான், பின்னர் அவ்விசை மட்டும் குழலின் வெளிவந்து முன்பெற்ற சொற்களை நினைவுறுத்தி இனிமை செய்கிறது.

இசை தனியே இனிமை பயக்கும் எனில், இசைத் தட்டில் கேட்கப்படும் சீனர் இசை நமக்கேன் இனிமை செய்யவில்லை. அது சொல்லை நமக்கு நினைவுபடுத்தவில்லை யாதலால்தானே.

## 4. ஈதல் இன்பம்

உரை: ஈதல்-(பொருளையோ உழைப்பையோ) பிறர்க்குக் கொடுப்பது, இன்பம்-ஈந்தோர்க்கு இன்பமாகும்.

கருத்துரை: பொருளையோ உழைப்பையோ பிறர்க்குக் கொடுத்தல் இன்பம்.

ஆய்வுரை: ஈதல்-எழுவாய், இன்பம்-பயனிலை, செயப்படுபொருள் இல்லை.

''ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்'' என்றார் வள்ளுவர்.

## 5. உடைமை பொதுவே

உரை: உடைமை-உலகின் நிலையியல் பொருள், இயங்கியல் பொருள், மக்கள் உழைப்பின் பயன் ஆகிய உடைமை அனைத்தும், பொதுவே-உலக மக்கட்குப் பொதுவே.

கருத்துரை: உலகப் பொருளும் உலக மக்களின் உழைப்பின் பயனும் எல்லார்க்கும் பொதுவாக்கப்படுதல் முறை.

ஆய்வுரை: ஏ-தோற்றம், உடைமை எழுவாய்; பொது - பயனிலை. நூறுபேருள்ளார் நூறு காணி உண்டு. அந்நிலத்தில் நூறு வீடுகள் மக்கள் உழைப்பின் பயனாய் ஏற்பட்டவை, நூறு கலம் நெல் விளைவுண்டு. எனவே, ஒருவனுக்கு ஒரு வீடும் ஒரு கலம் நெல்லும் உட்பட ஒரு காணி நிலம் விழுக்காடு பெற உரிமையுண்டு.

## 6. ஊன்றுளம் ஊறும்

உரை: ஊன்று-தான் பெற்ற கல்வியிலேனும் தனக்குள்ள அறிவிலேனும் ஊன்றுகின்ற, உளம்-உள்ளமானது, ஊறும்-கருத்துக்களைப் பொழியும்.

கருத்துரை: ஊன்றி நினை; கருத்துக்கள் தோன்றும்.

ஆய்வுரை: உளம்-எழுவாய், ஊறும்-பயனிலை, செயப்படுபொருள் இல்லை, ஊன்றுஉளம்-வினைத்தொகை.

## 7. எழுது புதிய நூல்

உரை: புதிய நூல்-கருத்திலே புதியதான நூற்களை, எழுது-நீயாக எழுது.

கருத்துரை: இருக்கும் வைணவம், சைவம், முதலியவை பற்றி நூற்களின் கருத்தை அமைத்தே நூல் இயற்றுவது பயனற்றவேலை.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், இதில் நீ என்ற சொல் தோன்றி யிருக்கவில்லை யல்லவா? எழுது-பயனிலை, நூல்-செயப்படு பொருள். எழுது புதிய நூல் என்பதைப் புதிய நூல் எழுது என்று பொருள் சொல்லும் போது மாற்றிச் சொல்வது, ''மொழிமாற்றுப் பொருள் கோள்'' எனப்படும்.

## 8. ஏடு பெருக்கு

உரை: ஏடு-நாள், கிழமை, திங்கள்தோறும் வரும் செய்தி, கட்டுரைத் தாள்களை, பெருக்கு-மிகுதியாக்கு.

கருத்துரை: வெளிவரும் ஏடுகள் மிகுதியடைய வேண்டும்.

ஆய்வுரை: — நீ-தோன்றா எழுவாய். பெருக்கு-பயனிலை, ஏடு-செயப்படுபொருள்.

## 9. ஐந்தொழிற்கிறை நீ

உரை: நீ-நீதான், ஐந்தொழிற்கு-இயற்கையில் அமைந்தவற்றைக் கொண்டு இயற்றப்படும் ஆக்கல், காத்தல், இயற்றல், மாற்றல், அருளல் ஆகிய ஐந்து தொழில்கட்கும், இறை-உடையவன்.

கருத்துரை: ஆவதும் அழிவதும் உன்னால் ஆம்.

ஆய்வுரை: நீ-எழுவாய்; இறை-பயனிலை, செயப்படு பொருள் இல்லை.

ஆக்கல் முதலிய ஐந்தும், ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றில் அடக்கலும் உண்டு. ஆக்கல்-தாயின் துணையால் தந்தை மக்களை ஆக்கலும் தந்தையின் துணையால் தாய் மக்களை ஆக்கலும், பொருள் ஆக்கலும் ஆம்.

காத்தல்-மக்களை ஓம்புதலும்; பொருளைக் கெடாதிருத்தலும், அழித்தல்-அனைவரும் உறவினர், ஆட்சியைப் பொதுமைசெய் முதலியவற்றிற்கு அப்பாலாகிய கொள்கைகளை அறிவுரையால் இயலாது செய்வது.

## 10. ஒற்றுமை அமைதி

உரை: ஒற்றுமை-உலக மக்களிடம் ஏற்படும் மனவொற்றுமைதான், அமைதி-அமைதி எனப் படும்.

கருத்துரை: மன வொற்றுமைதான் உலகஅமைதி யாகும்.

ஆய்வுரை: ஒற்றுமை-எழுவாய், அமைதி-பயனிலை.

## 11. ஓவியம் பயில்

உரை: ஓவியம்-ஓவியத் தொழில், பயில் - நீ பயின்று கொள்.

கருத்துரை: ஓவியப் பயிற்சி பெறு.

ஆய்வுரை: ஓவியம்-சித்திரம், நீ-தோன்றா எழுவாய்; பயில்-செயப்படுபொருள்.

## 12. ஒளவியம் பெருநோய்

உரை: ஒளவியம்-ஒருவனுக்குள்ள பொறாமை பெருநோய்-அவனுக்குத் தொழுநோய் போல் துன்பந் தருவது.

கருத்துரை: பொறாமை துன்பந் தருவதாகும்.

ஆய்வுரை: ஒளவியம்-எழுவாய், பெருநோய்-பயனிலை, பெருநோய்-குட்டநோய்.

## 13. கல்லார் நலிவர்

உரை: கல்லார்-படிக்காதவர், நலிவர்-நலிவடைவார்கள்.

கருத்துரை: கல்வி வேண்டும்.

ஆய்வுரை: கல்லார்-எழுவாய், நலிவர்-பயனிலை. படிப்பதால் மடமைபோம். மடமை போகவே நல்லதன் நலமும் தீயதன் தீமையும், உலகின் உண்மையும் ஏற்படும்.

## 14. காற்றினைத் தூய்மை செய்

உரை: காற்றினை-உன்னை அணுகும் காற்றை, தூய்மை செய்-நீ தூய்மையாக்கிக்கொள்.

கருத்துரை: காற்றைத் தூய்மைப்படுத்து.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், தூய்மை செய்-பயனிலை, காற்று-செயப்படுபொருள். காற்றைத் தூய்மை செய்வதாவது, தான் வாழும் சுற்றுப் புறத்தைத் தூய்மையாக அழுகியவை, கழிவடை சேராது காத்தல்.

## 15. கிழிப்பொறி பெருக்கு

உரை: கிழி-துணி நெய்யும், பொறி-பொறிகளால் ஆன ஆலைகளை, பெருக்கு-பெருகச் செய்.

கருத்துரை: துணி ஆலைகளைப் பெருக்கு.

## 16. கீழ்மகன் உயர்வெனும்

உரை: கீழ்மகன்-அறிவில்லாதவன், உயர்வு எனும் -தான் பிறப்பால் உயர்ந்தவன் என்று சொல் வான்.

கருத்துரை: பிறப்பில் உயர்வு பேசுவோன் அறிவிலி.

ஆய்வுரை: எனும்-என்னும் என்பதன் தொகுத்தல்.

## 17. குள்ள நினைவு தீர்

உரை: குள்ள நினைவு-குறுகிய நினைவுகளை, தீர்-நீக்கு.

கருத்துரை: குறுகிய நினைவு வேண்டாம்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், தீர்-பயனிலை நினைவு-செயப்படுபொருள். குறுகிய நினைவா னது உலகில் மதம், சாதி வளர்வதற்குரிய தாழ்ந்த கருத்து.

## 18. கூன் நடை பயிலேல்

உரை: கூன்-கூனிய, நடைபயிலேல்-நடக்கப் பழ காதே.

கருத்துரை: நிமிர்ந்து நடக்க வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய். பயிலேல்-பயனிலை, நடை செயப்படுபொருள்.

## 19. கெடு நினைவகற்று

உரை: கெடு-பிறர் கெட்டுப் போவதற்குக் காரண மான, நினைவு அகற்று-நினைப்பை நீக்கு.

கருத்துரை: பிறரைக் கெடுக்க எண்ண வேண்டாம்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய். அகற்று-பயனிலை. கெடுநினைவு-செயப்படுபொருள்.

## 20. கேட்டு விடை இறு

உரை: கேட்டு-உன்னிடம் பேசுவோரின் பேச்சை வாங்கிக் கொண்டு, விடை இறு-பதில் கூறு.

கருத்துரை: பிறர் சொல்லை முழுவதும் வாங்கிக் கொண்டு விடை கூறு.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய். இறு-பயனிலை. விடை-செயப்படுபொருள்.

## 21. கைம்மை அகற்று

உரை: கைம்மை-கொழுநன் இறந்தால் பெண் வேறொருவனை மணந்து கொள்ளாமல் வாழ்நாளைக் கழிக்க வேண்டும்என்ற நிலைமையை, அகற்று-நீ நீக்கி அவள் மறுமணம் செய்து கொள்ளும் நிலையை ஏற்படுத்து.

கருத்துரை: கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளும் நிலை ஏற்பட வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய். அகற்று-பயனிலை. கைம்மை-செயப்படுபொருள்.

## 22. கொடுத்தோன் பறித்தோன்

உரை: கொடுத்தோன்-தனக்கு உள்ளதுபோக, மிகுதியாய் உள்ளதைப் பிறருக்குக் கொடுத்தவன். பறித்தோன்-பிறர்க்குரிய பொருளை வாணிகத்தாலும் வஞ்சத்தாலும் முன்பு பறித்தவனே

கருத்துரை: உடையாரின் பெருஞ்செல்வம் இல்லாருடையது.

ஆய்வுரை: கொடுத்தோன் — எழுவாய், பறித்தோன்-பயனிலை. வாணிகம் என்பது, ஒரு வகைச் சுரண்டல்; மக்கள் நிகர் என்னும் குடியாட்சியில் இது இராது.

## 23. கோனாட்சி வீழ்த்து

உரை: கோனாட்சி-ஒருவன் தான் விரும்பியபடி ஆளும் ஆட்சியை, வீழ்த்து-வீழ்த்தி குடியாட்சியாக்கு.

கருத்துரை: குடியாட்சி வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், வீழ்த்து-பயனிலை, கோனாட்சி-செயப்படுபொருள்.

## 24. சதுர் பிறர்க்குழைத்தல்

உரை: பிறர்க்கு உழைத்தல்-பிறர் நலத்திற்கு உழைப்பது, சதுர்-சதுர்ப்பாடாம்.

கருத்துரை: பிறர்க்குழைக்கும் ஆற்றல் பெற வேண்டும்.

ஆய்வுரை: உழைத்தல்-எழுவாய், சதுர்-பயனிலை.

## 25. சாதல் இறுதி

உரை: சாதல்-உடல் உயிர் பிரிதல், இறுதி-ஒருவனின் முடிவு.

கருத்துரை: ஒருவனுயிர் உடல் பிரிந்தபின் அவன் மற்றும் ஏதோ நிலைமைக்குள்ளாகிறான் எனல் இல்லை.

ஆய்வுரை: சாதல்-எழுவாய், இறுதி-பயனிலை, மறு பிறப்பு இல்லை என்பது, இதனால் பெறப்பட்டது.

## 26. சிறார் நலம் தேடு

உரை: சிறார் நலம்-ஆண் பெண் ஆகிய குழந்தைகளின் நன்மையை, தேடு-ஏற்படுத்து.

கருத்து : குழந்தைகளின் பிற்கால நன்மையைத் தேடு.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், தேடு-பயனிலை, நலம்-செயப்படுபொருள்.

சிறார் நலம் தேடுவது, அவர்க்குக் கல்வி நலம் கிடைக்கச் செய்வதும், பின்னாளில் செல்வம் முதலிய எவற்றிலும் நிகர் உரிமை இருக்குமாறு உலக நிலையை மாற்றியமைக்கப் போராடுவதும் ஆகும்.

## 27. சீர்பெறல் செயலால்

உரை: சீர்பெறல்-ஒருவன் சீரடைவது, செயலால்-தன் செயலால் ஆம்.

கருத்துரை: ஒருவன் சீர் அடைவதற்கு முற்பிறப்பு நல்வினையும், தெய்வமும் காரணம் என்ற மடமை ஒழிய வேண்டும்.

ஆய்வுரை: சீர்பெறல்-எழுவாய், ஆம் என ஒரு பயனிலை வருவிக்க.

## 28. சுவையுணர் திறங்கொள்

உரை: சுவை உணர்-சுவை உணர்கின்ற, திறம் கொள்-திறமை பெறு.

கருத்துரை: சுவையுணர்வு தேவை.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், கொள்-பயனிலை, உணர்திறம்-செயப்படுபொருள்.

உலக நிகழ்ச்சியிலும், கவிதையிலும் மேம்பட்டு வரும் நகை முதலிய ஒன்பது சுவையும் உணர் திறம் இன்றேல் கற்றதனால் ஆயபயன் என்ன?

## 29. சூழ்நிலை நோக்கு

உரை: சூழ்நிலை-வினை செய்வதற்கு, அன்றுள்ள நிலைமையை, நோக்கு - ஆராய்ந்து தொடங்கு.

கருத்துரை: வினை செய்ய அன்றைய நிலை ஆராயப்பட வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், நோக்கு-பயனிலை, சூழ்நிலை-செயப்படுபொருள்.

## 30. செல்வம் நுண்ணறிவாம்

உரை: நுண்ணறிவு-நுண்ணறிவால், செல்வம் ஆம்-செல்வம் தழைக்கும்.

கருத்துரை: நுட்ப அறிவு பெற வேண்டும்.

ஆய்வுரை: செல்வம்-எழுவாய், ஆம்-பயனிலை.

## 31. சேய்மை மாற்று

உரை: சேய்மை-விரிந்த உலகில் உனக்கும் பிறர்க்கும் உள்ள தொலைவை, மாற்று-புதுமை ஊர்தி, தொலையறி கருவி ஏற்படுத்துவதால் இல்லாமற் செய்.

கருத்துரை: புதிய ஊர்திகள், தொலையறி கருவிகள் உண்டாக்க வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், மாற்று-பய னிலை, சேய்மை-செயப்படுபொருள்.

## 32. சைகையோ டாடல்தேர்

உரை: சைகையோடு - அபிநயத்தோடு கூடிய, ஆடல்-ஆடற்கலையை, தேர்-பயில்.

கருத்துரை: அபிநயத்துடன் ஆடல் பயில வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், தேர்-பய னிலை, ஆடல்-செயப்படுபொருள்.

## 33. சொற்பெருக்காற்றல் கொள்

உரை: சொற்பெருக்காற்றல் - சொற்பெருக்காற் றும் ஆற்றலை, கொள்-அடை.

கருத்துரை: சொற் பெருக்காற்றும் திறன் வேண் டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், கொள்-பய னிலை. ஆற்றல்-செயப்படுபொருள்.

## 34. சோர்வு நீக்கு

உரை: சோர்வு-உன் சொல்லிலும் செயலிலும் பிழைபாடு, நீக்கு-ஏற்படாமல் விழிப்போடிரு.

கருத்துரை: சொல்லிலும் செயலிலும் பிழை நேரல் ஆகாது.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், நீக்கு-பய னிலை, சோர்வு-செயப்படுபொருள்.

## 35. தனையினைக் களைந்துவாழ்

உரை: தனையினை-மதம், சாதி, பிறர் ஆட்சி ஆகிய அடிமைத் தனத்தை, களைந்து-நீக்கி, வாழ்-நல்வாழ்வை நிலை நிறுத்து.

கருத்துரை: அடிமைநிலை நீக்க வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், வாழ்-பய னிலை.

## 36. தாழ்வடிமை நிலை

உரை: தாழ்வு-மற்றவரைவிடச் செல்வ நிலையில் உனக்கு ஏற்பட்டுள்ள தாழ்வானது, அடிமை நிலை-உனக்கு உள்ள அடிமை நிலையேயாம்.

கருத்துரை: முழுவிடுதலை பெற்றவன் தாழ்வு அடையமாட்டான்.

ஆய்வுரை: தாழ்வு-எழுவாய், அடிமை நிலை-பயனிலை.

## 37. திருஎனல் உழு பயன்

உரை: திருஎனல்-செல்வம் என்று சொல்லப்படு வது, உழுபயன்-உழுவதன் விளைவுதான்.

கருத்துரை: உழவால் பெறும் செல்வமே செல் வம்.

ஆய்வுரை: எனல்-எழுவாய்; பயன்-பயனிலை. ''உழுவார் உலகத்தார்க்கு ஆணி'' என்பத றிக.

## 38. தீங்கனிவகை விளை

உரை: தீங்கனி-மா பலா, வாழை ஆகிய முக் கனியும், வகை-இனிமையும் பயனும் தருவ

தில் அவற்றின் இனமாகிய விளா, கொய்யா, ஆரஞ்சு, ஆப்பிள் முதலியனவும், விளை-உண்டாக்கு.

கருத்துரை: பயன் மரங்களை உண்டாக்குதல் வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், விளை-பயனிலை, தீங்கனிவகை-செயப்படுபொருள்.

## 39. துன்பம் இன்பத்தின் வேர்

உரை: துன்பம்-கோணிய அரசியல் காரணமாக உனக்கேற்பட்ட துன்பமே, இன்பத்தின் வேர்-அக்கோணிய அரசியலை மாற்றி அதனாற் பெறப்போகும் இன்ப வாழ்வுக்குக் காரணம் ஆகும்.

கருத்துரை: துன்பம், எழுச்சி தருவதால் அத் துன்பம் இன்பத்திற்குக் காரணமாகிறது.

ஆய்வுரை: துன்பம்-எழுவாய், வேர்-பயனிலை.

## 40. தூய நீராடு

உரை: தூய-தூய்மையான (அழுக்கற்ற), நீர்-நீரில், ஆடு-உடல் தூய்மை செய்.

கருத்துரை: அழுக்குத் தண்ணீரில் மூழ்குதல் கூடாது.

ஆய்வுரை: நீ-எழுவாய், ஆடு-பயனிலை.

## 41. தெருவெலாம் மரம் வளர்

உரை: தெருவெலாம்-தெருக்கள்தோறும்(இருபாங்கிலும்), மரம் வளர்-பழம் தரும் மரம், தேன் மலர் தரும் மரம் அல்லாத நிழல் தரும் மரங்களை உண்டாக்கு.

கருத்துரை: நிழல் தரும் உயர் மரங்களைத் தெருத் தோறும் வளர்க்க வேண்டும்.

ஆய்வுரை: நீ-எழுவாய், வளர்-பயனிலை, மரம்-செயப்படுபொருள். உயர் மரங்கள் அடர்வதால் மழை குன்றாது என்பது நுண்ணுணர்வுடையார் கருத்து. தேன் மலரும் பழங்களும் பூச்சிகளை அண்டுவிக்கும்.

## 42. தேன் எனப் பாடு

உரை: தேன் என-நாவுக்கினிதாவதுபோல் செவிக்கினியதாகிய தேனோ இது எனும்படி, பாடு-பாடல் திறம் பெறு.

கருத்துரை: பாடும் திறம் பெற வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், பாடு-பயனிலை. பாடுவோரால் பாடல் வளரும்; பாடலால் மொழி வளரும்; மொழி வளர்ச்சியே நல்வாழ்வாம்.

## 43. தைக்க இனிதுரை

உரை: தைக்க-கேட்போர் உள்ளத்தைக் கவருமாறு, இனிது-இனிதாக, உரை-உன் கருத்தைச் சொல்லுக.

கருத்துரை: மனதைக் கவரும்படி இனிதாகப் பேசுதல் வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், உரை-பயனிலை.

## 44. தொன்மை மாற்று

உரை: தொன்மை-இன்றைய நிலைக்கு ஒத்து வராத பழைய பழக்கங்களையும், பழங் கொள்

வைகளையும், மாற்று - முன்னேற்றத்துக்கு உரிய வகையில் மாற்றியமைத்துக்கொள்.

கருத்துரை: ஒத்து வராத பழமையை மாற்ற வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், மாற்று-பய னிலை, தொன்மை-செயப்படுபொருள்.

## 45. தோல்வி ஊக்கந்தரும்

உரை: தோல்வி-உடையானுக் கேற்படும் தோல் வியானது, ஊக்கந்தரும்-அவன் அவ்வினையை மீண்டும் செய்தற்குரிய மனந்தளராமையை உண்டாக்கும்.

கருத்துரை: விடா முயற்சி உடையானுக்குத் தோல்வி ஊக்கத்தையே உண்டாக்கும்.

ஆய்வுரை: தோல்வி-எழுவாய், தரும்-பயனிலை, ஊக்கம்-செயப்படுபொருள்.

## 46. நடுங்கல் அறியாமை

உரை: நடுங்கல்-அஞ்சத்தகாத இடத்து அஞ்சு தல், அறியாமை-பேதமையாகும்.

கருத்துரை: அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்.

ஆய்வுரை: நடுங்கல்-எழுவாய், அறியாமை-பயனிலை.

## 47. நால்வகைப்பிறவி பொய்

உரை: நால்வகைப் பிறவி-மக்களிடை உண் டெனக் கூறும் நால்வகையான நிலை, பொய்-பொய்யாகும்.

கருத்துரை: நான்கு சாதி உண்டெனல் பொய் யாகும்.

ஆய்வுரை: பிறவி-எழுவாய், பொய்-பயனிலை, பிறவி-பிறப்பு, நிலை.

இரு பிறப்பாளர் என்பதிலும் பிறப்பு என் பது நிலை என்று பொருள்படல் காண்க. இனி, இறப்பும் நிலைமிகல் என்க.

## 48. நினைவினில் தெளிவுகொள்

உரை: நினைவினில்-எண்ணியவற்றில், தெளிவு-தெளிந்தவற்றைமட்டும், கொள்-மேற்கொள்.

கருத்துரை: தெளிந்த கருத்தைச் செயற்படுத்து.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், கொள்-பய னிலை. தெளிவு-செயப்படுபொருள்.

தெளிந்த கருத்தாவது-மாறுகொளக் கொள்ளா மையும், ஐயம் அறுத்ததும் ஆகும்.

## 49. நீணிலம் உன் இ(ல்)லம்

உரை: நீணிலம்-இவ்வுலகம், உன்இல்லம்-உன் இல்லமே.

கருத்துரை: இவ்வுலகம் உன்னுடையது ஆத லின் உன்னுடன் பிறந்தாராகிய உலக மக்க ளொடு உனக்கு அதில் நிகர் உரிமை உண்டு.

ஆய்வுரை: நீணிலம்-எழுவாய், உன் இலம்-பய னிலை.

## 50. நுண்ணிதின் நின்மைதேர்

உரை: நுண்ணிதின்-நுண்ணிய பொருளிலுமுள்ள நுண்மை-அமைப்பின் நுட்பத்தை, தேர்-அறிந்து கொள்ள முயல்.

கருத்துரை: சிறிய பொருளில் உள்ள அமைப்பின் நுட்பத்தையும் அறிய முயற்சி செய்ய வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய்; தேர்-பயனிலை, நுண்மை-செயப்படுபொருள்.

அணுவில் அமைந்திருக்கும் அமைப்பின் நுட்பத்தைத தெரிந்ததன் பயன் அணுக்குண்டு. அதை நல்வழியிற் பயன் படுத்தினால் நலம் விளையும்.

## 51. நூலும் புளுகும்

உரை: நூலும்-உண்மை கூறும் என்று பொதுவாக நம்பப்படுகின்ற நூற்களும், புளுகும்-பொய்மை கூறும்.

கருத்துரை: எல்லா நூற்களும் உண்மை கூறும் என்று நம்பிவிடாதே.

ஆய்வுரை: நூலும்-எழுவாய், புளுகும்-பயனிலை, புளுகுநூற்கள் மனுநூல், புராணம் முதலியவை.

## 52. நெடுவான் உலவு

உரை: நெடுவான்-விரிந்த வானத்தின்கண் எங்கும், உலவு-அங்குள்ள நுண்ணியல் அறியவும், விரைவாக வழிச் செல்லப் பயிலவும் உலவும் திறம்பெறு.

கருத்துரை: வானிடை உலவும் திறம் வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், உலவு-பயனிலை.

## 53. நேர்பயில் ஆழ்கடல்

உரை: நேர்-கண்கூடாக, ஆழ்கடல்-ஆழமுடைய கடலின் உள்ளும் புறமும் ஆகிய நிலையை, பயில்-அறி.

கருத்துரை: கடலின் உள்வெளி நிலையை அறிதல் வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய்; பயில்-பயனிலை, ஆழ்கடல்-செயப்படுபொருள்.

## 54. நைந்தார்க்கு உதவிசெய்

உரை: நைந்தார்க்கு-உலகின் உரிமை இழந்த நாட்டார்க்கு, உதவிசெய்-படை முதலியவற்றால் உதவி செய்து அவர்கட்கு உரிமை நிலை உண்டாக்கு.

கருத்துரை: உரிமை இழந்த நாட்டிற்கு உதவி செய்தல் வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், செய்-பயனிலை, உதவி-செயப்படுபொருள்.

## 55. நொடிதொறும் புதுமைதேர்

உரை: நொடிதொறும்-ஒவ்வொரு நொடிப்போதிலும், புதுமை-கருத்துப் புதுமையையும், பொருட் புதுமையையும், தேர்-அறி.

கருத்துரை: புதுமை அறிதலில் நொடிதோறும் முன்னேறுதல் வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய்; தேர்-பயனிலை, புதுமை-செயப்படுபொருள்.

## 56. நோய் தீ ஒழுக்கம்

உரை: நோய்-உனக்குற்ற நோயின் காரணம், தீ ஒழுக்கம்-உன் பெற்றோரேனும் நீயேனும் முன்னர் மேற்கொண்ட கெட்ட நடத்தையாம்.

கருத்துரை: கெட்ட நடத்தை கூடாது.

ஆய்வுரை: நோய்-எழுவாய், தீயொழுக்கம் பயனிலை.

## 57. பல்கலை நிறுவு

உரை: பல்கலை-பல்கலைக் கழகங்களை, நிறுவு-எங்கணும் ஆக்கு.

கருத்துரை: எங்கணும் எவர்க்கும் பல்கலைக் கழகங்கள் வேண்டும்.

ஆய்வுரை : நீ-தோன்றா எழுவாய். நிறுவு - பயனிலை. பல்கலை-செயப்படுபொருள்.

## 58. பார்ப்புப் பொதுப்பகை

உரை: பார்ப்பு-மதம் பரப்பு நோக்கினர், பொதுப் பகை-உலகினர் முன்னேற்றத்திற்குப் பகைவர் ஆவார்.

கருத்துரை : பார்ப்பனீயம் தொலைதல் வேண்டும்.

ஆய்வுரை: பார்ப்பு-எழுவாய், பகை-பயனிலை.

## 59. பிஞ்சு பழாது

உரை: பிஞ்சு-பருவம் நிரம்பாத பிஞ்சானது அந்நிலையில், பழாது-பழுக்காது.

கருத்துரை: கல்வியறிவில்லாதவன் உலகுக்குப் பயன் படமாட்டான்.

ஆய்வுரை: பிஞ்சு-எழுவாய், பழாது-பயனிலை, பிஞ்சு பழாது பிறிது மொழிதல்.

## 60. பீடு தன் மானம்

உரை: பீடு-பெருமை என்பது, தன்மானம்-தன் நிலையில் தாழாமையும், தாழ்ந்தால் உயிர் வாழாமையும் ஆகும்.

கருத்துரை: தன்மானம் காத்தல் வேண்டும்.

ஆய்வுரை: பீடு-எழுவாய், தன்மானம்-பயனிலை. இளிவரின் வாழாத மானம் உடையார், ஒளி தொழுது ஏத்தும்உலகு. (குறள்—உ. மானம் 10)

## 61. புதுச்சுவை உணவுகாண்

உரை: புதுச்சுவை-சுவையிற் புதிது புதிதாமாறு; உணவுகாண்-உணவு ஆக்கு.

கருத்துரை: உணவிற் புதிய புதிய சுவை உண்டாக்க வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய். காண்-பயனிலை. உணவு-செயப்படுபொருள்.

உணவில் புதுப் புதுச்சுவை ஆமாறு உணவாக்காவிடில் ஊண் அளவு குறையும்; அதனால் உடல் நலம் குன்றும்.

## 62. பூப்பின் மணங்கொள்

உரை: பூப்பின்-பூத்தபின், மணம்-மணப் பொருளான பூச்சுவகை, கொள்-ஆக்கிக்கொள்.

கருத்துரை: மங்கைப் பருவம் அடைந்தவளே மணந்தின்புறந்தக்கவள். இது பிறிதுமொழிதல்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், கொள்-பயனிலை. மணம்-செயப்படுபொருள். இதனால் குழந்தை மணக் கொடுமை விளக்கப்பட்டது.

## 63. பெண்ணொடாண் நிகர்

உரை: பெண்ணோடு-பெண்ணும், ஆண்-ஆணும் நிகர்-நிகரானவர்.

கருத்துரை: கல்வி, மணம், சொத்துரிமை முத லியவற்றில் இருபாலரும் நிகராவர்.

ஆய்வுரை: பெண்-ஆண்-எழுவாய்கள், நிகர் - பயனிலை.

## 64. பேயி(ல்)லை மதம(ல்)லால்

உரை: மதமலால்-மதமான பேய் என்பதொன்றி றிருப்பதல்லது, பேய்இலை-தனியே பேய் என்பதொன்று கிடையாது.

கருத்துரை: மதமான பேய் பிடியாதிருத்தல் வேண்டும்.

ஆய்வுரை: பேய்-எழுவாய், இலை-பயனிலை, இலை, அலால் என்பன இல்லை அல்லால் என் பவற்றின் தொகுத்தல், ''மதமான பேய் பிடியாதிருத்தல் வேண்டும்'' — வள்ளலார்.

## 65. பைந்தமிழ் முதன்மொழி

உரை: பைந்தமிழ்-சுவையூட்டமுள்ள தமிழானது முதன் மொழி. ஆரியமாகிய சார்புமொழி போலல்லாது முதன்மையான மொழியாகும்.

கருத்துரை: தமிழ் முதல் மொழி.

ஆய்வுரை: பைந்தமிழ்-எழுவாய், முதன் மொழி— பயனிலை.

ஆரியம் சார்பு மொழி என்பது என்ன? நாவலந் தீவு முழுதும் தமிழரே மக்களாகவும், தமிழேமொழி யாகவும் இருந்தகாலை, ஈண்டுக் குடியேறிய ஆரிய மொழியானது தமிழைச் சார்ந்தே வாழ்ந் தது. முத்து என்னும் தமிழ் மொழியைச் சார்ந்து முக்தா என்ற வடமொழி தோன்றியது. தன்மை

யின் அடியாகிய, தன் என்பதைச் சார்ந்தே தத்துவம் என்ற வடசொல் தோன்றியது. பிறவும் இவ்வாறே.

## 66. பொழுதென இரவுகாண்

உரை: பொழுதென - பகற்பொழுதைப்போல, இரவு காண்-இரவைச் செய்.

கருத்துரை: இரவில் மூலை முடுக்கெல்லாம் விளக்கெரிய வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், காண்-பயனிலை, இரவு-செயப்படுபொருள்.

இரவில் விளக்கொளி இல்லாத இடத்து கழிவு கழித்தலும், நச்சுப் பூச்சி அண்டலும், கரவினர் அண்டலும் கூடும்.

## 67. போர்த்தொழில் பழகு

உரை: போர்த்தொழில்-தரை, கடல், வான் ஆகிய இடத்து நிகழும் போர்த்தொழிலில், பழகு-பயிற்சி பெறு.

கருத்துரை: எவ்வகைப் போர்த்தொழிலிலும் பயிற்சி பெறவேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், பழகு-பயனிலை.

## 68. மறைஎனல் சூழ்ச்சி

உரை: மறைஎனல்-மறைந்த பொருள் உடையதென்றோ பிறர் அறியக் கூடாமல் மறுக்கப் பட்டதென்றோ கூறப்படும் நூல், சூழ்ச்சி-ஒரு கூட்டத்தின் தந்நல ஏற்பாட்டுத் திட்டமே.

கருத்துரை: ஆரியர் மறையை ஒப்பலாகாது.

ஆய்வுரை: எனல்-எழுவாய், சூழ்ச்சி-பயனிலை.

## 69. மாறுவ தியற்கை

உரை: மாறுவது-பொருள் நிலை, மக்களின் தேவை காலத்தாலும், இடத்தாலும், சூழ் நிலையாலும் மாறுபடுவது, இயற்கை-இயல் பாகும்.

கருத்துரை: மாறுவது இயற்கையாதலின் எதிர்க் காதே.

ஆய்வுரை: மாறுவது-எழுவாய், இயற்கை-பய னிலை.

## 70. மிதியடியொடு நட

உரை: மிதியடியொடு-செருப்பணிந்து, நட-நடப் பாயாக.

கருத்துரை: வெறுங்காலொடு நடக்கலாகாது.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், நட-பய னிலை.

## 71. மீச்செலவு தவிர்

உரை: மீச்செலவு-வரவுக்கு மேற்படவும், டாம் பீகம் தோன்றவும் செலவு செய்தல், தவிர்-நீக்கு.

கருத்துரை: பெருஞ்செலவு செய்தலாகாது.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், தவிர்-பய னிலை, செலவு-செயப்படுபொருள்.

## 72. முகச்சரக்காய் வாழ்

உரை: முகச்சரக்காய்-மக்கள் வாழ்க்கையில் நீ ஓர் எடுத்துக்காட்டாகி, வாழ்-புகழொடு வாழ்க.

கருத்துரை: எடுத்துக் காட்டும்படி வாழ்க.

ஆய்வுரை: நீ தோன்றா எழுவாய், வாழ்-பய னிலை, முகச் சரக்கு-எடுத்துக் காட்டும் சிறந்த சரக்கு.

## 73. மூப்பினுக் கிடங்கொடேல்

உரை: மூப்பினுக்கு - முதுமைக்கு, இடங்கொ டேல்-நெஞ்சத்தயர்வையும், நோய்வரும் செய லையும் மேற்கொள்ளாதே.

கருத்துரை: இளைமையோடிருக்க வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், கொடேல்— பயனிலை, இடம்-செயப்படுபொருள்.

## 74. மெய்க்கழி வயற்கின்னா

உரை: மெய்க்கழிவு-தெருவிலும், மக்கள் அண்டு மிடங்களிலும் கழிக்கப்படும் மெய்க்கழிவு- (மலம், சிறுநீர், சளி, எச்சில்) அயற்கு-அய லார்க்கு, இன்னா-துன்பம் தருவன.

கருத்துரை: பிறர்க்குத் துன்பம் தரும்படி மெய்க் கழிவு கழிக்கலாகாது.

ஆய்வுரை: மெய்க்கழிவு-எழுவாய், இன்னா-பய னிலை.

## 75. மேலைஉன் பெயர் பொறி

உரை: மேலை-எதிர்காலம் என்னும் செப்புத் தகட்டில், உன் பெயர் பொறி-உன் புகழை எழுது.

கருத்துரை: புகழைத் தேடவேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், பொறி-பய னிலை. பெயர்-செயப்படுபொருள்.

புகழை எழுதுவதாவது-புகழுக்குரிய செயல் செய்தல்.

## 76. மையம் பாய்தல் தீர்

உரை: மையம் பாய்தல்-மாறுகொண்ட இருபுறமும் சேராமலிருந்து, வென்றவர் புறத்திற் சேரும் தாழ்நடையை, தீர்-நீக்கு.

கருத்துரை: வென்றாருடன் சேர்ந்து தோல்வியுற்றாரை நலிவு செய்தல் தாழ் செயலாகும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், தீர்-பயனிலை, மையம் பாய்தல்-செயப்படுபொருள்.

## 77. மொடு மாற்றுப் பொது வின்னா

உரை: மொடு மாற்று-கொள்ளை இலாப விற்பனை, பொது இன்னா-பொது மக்களுக்குத் துன்பம் ஆம்.

கருத்துரை: வாணிகத்தில் கொள்ளை இலாபம் அடிக்கலாகாது.

ஆய்வுரை: மொடு மாற்று—எழுவாய், இன்னா-பயனிலை.

## 78. மோத்தலிற் கூர்மை கொள்

உரை: மோத்தலில்-மோந்து பொருளின் நாற்றமறிதலில், கூர்மைகொள்-மிக்குணர்வு பெறு.

கருத்துரை: மூக்குணர்வை இழத்தல் கூடாது.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், கொள்-பயனிலை, கூர்மை-செயப்படுபொருள்.

மூக்குத்தூள் போடுவதாலும், சளிநோய் தேடிக் கொள்வதாலும் மூக்குணர்வு கெடுகிறது.

### 79. வாழாட்கு வாழ்வு சேர்

உரை: வாழாட்கு-துணைவனை இழந்து வாழா நிலையுற்ற பெண்ணுக்கு, வாழ்வு சேர்-மறு மணம் செய்து கொள்ளும் நிலையை ஏற்படுத்து.

கருத்துரை: பெண்கட்கு மறுமணம் வேண்டும்.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், சேர்-பயனிலை. வாழ்வு-செயப்படுபொருள்.

### 80. விடுலை உயிர்க்கு உயிர்

உரை: விடுதலை-மதம், சாதி, சடங்கு முதலிய கட்டுகளினின்று விடுபடும் நிலை, உயிர்க்கு உயிர்-உன் உயிர்க்கு உயிராகும்.

கருத்துரை: விடுதலை வேண்டும்.

ஆய்வுரை: விடுதலை-எழுவாய், உயிர்-பயனிலை

### 81. வீடெனல் சாதல்

உரை: வீடு எனல்-உயிர் விடுதல், மோக்ஷம், முத்தி என்பன அனைத்தும், சாதல்-அதன் பின் எந்த நிலைமைக்கும் உரிமையற்ற சாக்காடாகும்.

கருத்துரை: ஆத்மா இருப்பதும், உடல் நீங்கிய பின் அது வேறு நிலையை அடைவதென்பதும் இல்லை.

ஆய்வுரை: எனல்-எழுவாய், சாதல்-பயனிலை.

## 82. வெறும் பேச்சுப் பேசேல்

உரை: வெறும் பேச்சு-பயனில்லாத பேச்சுக்களை, பேசேல்-பேசாதே.

கருத்துரை: பயனற்ற பேச்சுப் பேசுதல் வேண்டாம்.

ஆய்வுரை: நீ - தோன்றா எழுவாய், பேசேல்-பயனிலை, பேச்சு-செயப்படுபொருள்.

## 83. வேளையோடு ஆர உண்

உரை: வேளையோடு-முன் உண்டு அற்றபின், ஆரஉண்-வேண்டுமட்டும் உணவு உண்.

கருத்துரை: பசி எடுத்த பின் வேண்டுமட்டும் புசி.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், உண-பயனிலை.

## 84. வையம் வாழ வாழ்

உரை: வையம்-உலக மக்கள், வாழ-நல்வாழ்வு பெறுவதற்காக, வாழ்-தொண்டாற்றி வாழ்க.

கருத்துரை: பிறர்க்கென வாழ்க.

ஆய்வுரை: நீ-தோன்றா எழுவாய், வாழ்-பயனிலை.

# பொங்கல் வாழ்த்துக் குவியல்

# பொங்கற் பாட்டுகள்

## பொங்கல் வாழ்த்து

அறுசீர் விருத்தம்.

தைத்திங்கள் முதல் நாள் என்றார்!
தமிழர்கள் திருநாள் என்றார்!
புத்தமு, தாக வந்த
பொங்கல் நாள் என்றார்க் கின்றார்!
கைத்திற ஓவி யங்கள்
காட்டுக வீட்டில் என்றார்!
முத்தமிழ் எழுக என்றார்!
முழங்குக இசைகள் என்றார்!

கொணர்கவே புதிய செந்நெல்
குன்றாக என்றார்! பெண்கள்
அணிகள், பொன் னாடை யாவும்
அழகாகக் குவிக்க என்றார்!
மணமலர் கலவை கொண்டு
மலைஎனக் குவிக்க என்றார்!
கனுவகல் கரும்பும் தேனும்
கடிதினிற் கொணர்க என்றார்!

எழுத்தாளர் பொங்கல் வாழ்த்தே
எழுதுக ஏட்டில் என்றார்!
பழச்சுவை வருக என்றார்!
பட்டியல் எழுதிச் சென்று
வழக்கத்துக் கடைச்ச ரக்கு
வாங்கிவந் திடுக என்றார்!
முழுக்குலை வாழை மாவின்
தோரணம் முடிக்க என்றார்!

எழுந்தது கீழக்க டல்மேல்
இளங்கதிர், மூசைத் தங்கம்
பொழிந்தது! விண்ணும் மண்ணும்
பொலிந்தது தமிழர் நாடு!
வழிந்தது பொங்கல் பொங்கி!
வாழ்த்தினர் பரிதி தன்னைத்
தழைத்தது நெஞ்சில் இன்பம்,
தமிழர்கள் பொங்கல் உண்டார்.

வாழிய பொங்கல் நன்னாள்!
வாழிய திராவி டந்தான்!
வாழிய புதுமை நூற்கள்!
வாழிய தமிழ்க் கலைகள்!
சூழிய மணிமு கில்கள்!
துலங்குக நன்செய் யாண்டும்
ஆழ்கடல் மிசை எழுந்த
அழகிய பரிதி வாழ்க.

## பொங்கல் வாழ்த்து

(அகவல்)

பொன்னாய்ப் பூவாய்ப் பொலிந்த ஞாயிறே,
உண்ணும் விழிகள் உவக்குமோ வியமே,
முன்னைக்கு முன்னர் முளைத்தமூ தொளியே,
இந்நாள் மட்டும் இளைமைமா றாமல்
புதிது புதிதெனப் போற்றும் பரிதியே,
இந்நாள் புதுமையிற் புதுமை இயற்றினாய்.

காலை மலரெடுத்துக் கட்டழகு கொட்டிக்
கோலக் கதிர்கள் குலுங்க, நீலக்
கடல்மிசை எழுந்த கதிரின் செல்வனே,
ஆடல்வா ழியநின் அழகு வாழிய!

புத்தம் புதிய முத்தரிசி ஆய்ந்து
தித்திக் கும்பால் செம்மையின் அளாவ
அலரிச் செவ்விதழ் அவிழ்ந்தன போல
இலகெரி அடுப்பில் ஏற்றிய பானை,
பொங்கிடப், ''பொங்கலோ, பொங்கலென்
நார்த்தே
புரைதீர் வெல்லம், புலிப்பல் போன்ற
ஏலம், பருப்புச் சேலத்து நறுநெய்
நன்று சேர்த்துக் குன்றென இறக்கித்
தேன்பெய்து, முக்கனி சேர்த்து விருந்துடன்
ஒக்கலும் மக்களும் உரிமையின் உட்கார்ந்
திருள்நீக்கி எழுநன் எழுச்சி வாழ்த்தி
அருள்தேக் குழவர் வாழ்த்தி அந்தமிழ்
வாழ்வினை வாழ்த்தி வாழ்த்தி
மூழ்குவர் இன்பத்து முழுதுண்டு நன்றே!

## திராவிட நாட்டுக்குப் பொங்கல் வாழ்த்து

(எண்சீர் விருத்தம்)

அகத்தியனும் காப்பியமும் தோன்று முன்னர்!
அரியதமிழ்த் தலைக்கழகம் தோன்று முன்னர்!
மிகுத்தகடல், குமரியினை மறைக்கு முன்னர்!
விண்ணுயர்ந்த பனிமலைதான் நிமிருமுன்னர்ப்
பகுத்தறிவின் துணையாலே அரசியற்றிப்
பல்கலையின் ஒளியாலே உலகம் காத்துத்
திகழ்பழைய தமிழகமே, இடைநாள் தன்னில்
திராவிடநா டெனப்போற்றும் என்றன் அன்னாய்,

பத்தன்று; நூறன்று; பன்னூ றன்று;
பல்லாயி ரத்தாண்டாய்த் தமிழர் வாழ்வில்
புத்தாண்டு, தைம்முதல்நாள், பொங்கல்நன்னாள்,
போற்றிவிழாக் கொண்டாடி உன் நலத்தைச்

T.18576

செத்தவரை மறந்தாலும் மறவா வண்ணம்
செந்தமிழால் வானிலெல்லாம் செதுக்கிவைத்
தோம்!
பத்தரைமாற் றுத்தங்கம் ஒளிமாய்ந் தாலும்
பற்றுளத்தில் உன்பழஞ்சீர் மங்கிற்றில்லை.

தெலுங்குமலை யாளங்கன் னடமென் கின்றார்
சிரிக்கின்றாய் அன்னாய்நின் மக்கள் போக்கை!
நலங்கெட்டுப் போனதில்லை, அதனாலென்ன?
நான்குபெயர் இட்டாலும் பொருள் ஒன்றன்றோ?
கலங்கரையின் விளக்குக்கு மறுபேர் இட்டால்,
கரைகாணத் தவறுவரோ மீகாமன்கள்?
இலங்குதிரு வே, வையம் செய்த அன்னாய்
எல்லாரின் பேராலும் உனக்கென் வாழ்த்தே!

தமிழகமே, திராவிடமே, தைம்முதல் நாள்
தனிலுன்னை வாயார வாழ்த்துகின்றேன்.
அமிழ்தான பாற்பொங்கல் ஆர உண்டே
அதைஒக்கும் தமிழாலே வாழ்த்துகின்றேன்,
எமைஒப்பார் எவருள்ளார்? எம்மைவெல்வார்
இந்நிலத்தில் பிறந்ததில்லை; பிறப்பதில்லை,
இமைப்போதும் பழிகொண்டு வாழ்ந்ததில்லை
எனும் உணர்வால் வாழ்த்துகின்றேன்; வாய்ப்
பேச்சல்ல.

அன்றொருநாள் வடபுலத்தைக் குட்டுவன்போய்
அழிக்குமுனம் தன்வீட்டில் இலையி லிட்ட
இன்பத்துப் பொங்கலுண்டான், அதைப்போலத்
தான்
இன்றுண்டேன்; அன்றுன்னை வாழ்த்தினான்போல்
நன்றுன்னை வாழ்த்துகின்றேன் எனைப்
பெற்றோயே
நல்லுரிமை உன்மூச்சில் அகன்ற தில்லை.
பொன்னேஎன் பெருவாழ்வே அன்பின்வைப்பே
புத்தாண்டு வாழ்த்துரைத் தேன் நன்றுவாழ்க.

## பொங்கல் பொங்கிற்று !

(கலி வெண்பா)

உலகுநலம் காண உழவன் விதைத்தும்,
இலகு மணிக்கதிர் ஏறப்-பொலிதோள்
கவிழக் கதிரடித்துச் சேர்த்திட்ட செந்நெல்
குவித்து நிமிர்ந்தான்! குளிரில்-அவிழ்த்த
கதிர்ச்செல்வன் தானும் கடல்மேல் நிமிர்ந்தான்;

''இதுகேள் உழவனே, இந்த-முதுவையத்
தாட்சிஉனக் காகுக'' என்று கதிரவன்
மாட்சியுடன் வாழ்த்தி மகிழ்கின்றான்-கேட்ட
உழவன், ''நிறைநாளின் செல்வனே உன்றன்
எழில்வாழ்க,'' என்னுமோர் வாழ்த்தை மொழி
கின்றான்.

துய்ய உடம்புதான் சோர்வதே இல்லாமல்
வையகம் வாழ்ந்திட வாழும்அம்-மெய்யு ழவன்,
பொன்னின் புதுப்பரிதி வாழ்த்தியுளம்பூரித்துச்
செந்நெல்கொண் டில்லத்தே சேர்த்திட்டான்-
என்னே!

உயர்நெல்லைத் தீட்டும் உலக்கைப்பா டல்கள்!
அயில்விழிமா தர்அடுப்புயர்த்தபானைப்-பெயலான
பாலோடுமுத்தரிசி மேலெழுந்து பாடி வர
ஏலங்கற் கண்டுநெய் இட்டபடி—மேலும்
தழுவித், தேன் பன்னீர் சுளைக்கனி யாவும்
இழைய இழையத், தமிழால்—அழகுறவே
பொங்கலோ பொங்கல் என ஆர்த்தார்க்குச்
செங்கரும்பும்

தங்கம்நேர் மஞ்சள் விளைச்சலும்-எங்கணும் !
மாவிலைத் தாரும் மலியக், குருத்திலையைத்
தாவி விரித்திட்ட தையலர்கள்-ஆவலொடும்
அள்ளிவட் டித்திட்ட பொங்கலமிழ்தத்தைப்
பிள்ளைகள், பேரர், பெருமான்கள்-உள் அன்பார்
அன்னைமார் எல்லாரும் ஆரஉண் டார்கள்!

ஒருவீடு போலத் தெருவீ டுகளும்,
தெருவீ டுகள்போலத் தென்னாட்டிருக்கின்ற
வீடெல்லாம் இன்ப விளையாட்டாம்,வீட்டிலுள்ள
மாடுகன் றுக்கெல்லாம் மாச்சிறப்பாம்! சோடிப்
பாம்!

மங்காத செந்தமிழீர் வாரீர் நும் வீட்டிற்பால்
பொங்கிற்றா? வாழ்க பொலிந்து.

## பொன்னாடு வெல்கவே!

(எண்சீர் விருத்தம்)

உண்டாயா நீபொங்கல்? வீட்டிற்பால்பொங்
கிற்றா?
உட்காரப்பா உட்கார்! உற்றுக்கேள்! இங்கோர்
பண்தழைந்து வருவதுகேள்! நன்றாய்க்கேள்!
உன்றன்
பழநாட்டார் உள்ளத்தின் ஒலிஅதுதான் தம்பி!
பண்டுதொட்டுத் திராவிடத்தின் வடவெல்லை
என்று
பகர்ந்துயர்ந்த விந்தியத்தின் இப்புறத்தி லுள்ள
எண் தவிர்த்தார் எல்லாரும், ''எங்கள்திரா
விடந்தான்
என்றுவிடு தலையடையும்'' என்கின்றார் அன்றோ!

பனியில்லை; குளிரில்லை; இருள்கிழித்துக் கொண்டு
பகலவன்தான் தலைகாட்டப் பல்காட்டி வாழ்த்தி
இனியில்லை மடமைஎன ஆர்த்தாயே தம்பி
இரு! பார்இ தோஅறிவுக் கண்ணாடி பூண்பாய்!
முனைக்குமரி விந்தியத்தின் இடைப்பாங்கு வாழும்
முத்தமிழர் எல்லாரும், இத்திராவிடந்தான்
இனியடிமைத் தளையறுத்து விடுதலையே கொள்ள
ஏற்றசெயல் செய்கின்றார் தெரிகின்ற தன்றோ!

தைத்திங்கள் முதல்நாளின் திருவிழா, உன்றன்
தனிமையினை நீக்கித், திராவிட ரெல் லாரும்
எத்தாலும் ஒன்றென்று காட்டிற்றுக் கண்டாய்!
இனத்துநினை வெல்லாம்உன் மனத்தளவே
அன்றோ?

முத்துநிறை கீழ்க்கடல், மேற்கடல், தெற்கேகுமரி,
முன்வடக்கில் விந்தியமாம் மேவுதிரா விடர்கள்
ஒத்திந்த நாட்டினது விடுதலைக்கே என்றும்
உழைக்கின்றார் நிலங்குலுங்க! உற்றறிநீ தம்பி!

என்நாடு பிரிகஎனப் பணிசெய்கின் றாய்நீ!
எதிர்ப்போனும் அதைத்தானே செய்கின்றான்
தம்பி!

பொன்னாடு திராவிடமாம் என்கின்றாய் அஃது
புன்நாடென் றுரைப்பானும் பொன்னாடென்
போனே!

தென்னாட்டிற் கிளர்ச்சியினைச் செய்கின்றாய்
நீதான்.

சிரித்தபடி நிற்பானும் அதைத்தான்செய் கின்றான்
இன்னதனை நீயுணர மாட்டாயா தம்பி?
இனிவெற்றிக் கொடியேற்றல் ஒன்றுதான் பாக்கி!

மடமைஎன ஒன்றுண்டு! வாய்பெரிது! கையில்
வாள்ஒன்று வைத்திருக்கும் சிறைவீட்டு வாயிற்
படிமீது நிற்கும்! பல் லாற்பல்லை மெல்லும்!
பார்என்று கூச்சலிடும்! போர் நிறுத்தக் கெஞ்சும்!
விடேன்என்று மேற்செல்வாய்! விடுதலையைச்
செய்வாய்!

வீறிட்டுப் பாயும்உன் உடற்குருதி யால்உன்
கடமைசெய்வாய்! அம்மடமை தலைகவிழ்ந்து
போகும்.

கண்மூடி யிருந்திட்டால் மண்மூடும் உன்னை!

உன்நாட்டை மீட்கநீ உயிர்நீக்கப் பெற்றால்
உயிர்நீங்கச் செய்தானும் உன்நாட்டை மீட்டோன்!

தென்னாட்டிற் பிறந்தாயா? இல்லையா? நீஇத்
திருநாட்டின் மறவனா? இல்லையா? வீரர்
கல்நாட்டிக் கல்நாட்டிக் காலமெலாம் குருதிக்
கடலேமுக் கடலாகப் புகழ்நாட்டி னார்இப்
பொன்னாடு வெல்கவே பொங்கலோ பொங்கல்!
புதியதிரா விடம் வாழ்க பொங்கலோ பொங்கல்!

## தைத்திருநாளே மகிழ்ச்சி கொண்டுவா!

(எண்சீர் விருத்தம்)

அரிசியில்லை விறகில்லை கறியில்லை நல்ல
அரசில்லாக் காரணத்தால் இவ்வளவு தொல்லை!
வரிசையொடு வாழ்ந்தார்கள் தமிழ்நாட்டு மக்கள்!
மன்னவர்கள் அந்நாளில் முறைசெய்த தாலே!
பரிசில் பெறும் தமிழ்ப்புலவர் அந்நாளில்வாழ்ந்தார்
பைந்தமிழ்வாழ்ந் ததுவாழ்ந்த திப்பெரிய வையம்!
வருவாய்நீ தைப்பொங்கல் திருநாளே வாவா!
வறுமைஅறத் துன்பமற மகிழ்ச்சி கொண்டுவாவா!

வெட்டவெளி வானத்தை மாணிக்கம் ஆக்கும்
செங்கரும்பு நாட்டினிலே வெல்லமில்லை; வாழ்வை
எட்டிக்காய் ஆக்கிவிட்டார் ஆளவந்தார்! மானம்
இருப்பதாய்ச் சொல்கின்றார் அறிவற்ற பேச்சே!
எட்டுகின்ற பாங்கெல்லாம் தமிழர்புகழ் அன்றி
இல்லாமை என்னுமொரு பேச்சிருந்த தில்லை
மட்டற்ற செல்வமே ''தைப்பொங்கல் நாளே''
வறுமையறத், துன்பமற நீவந்தாய் வாவா!

தமிழ் இகழ்ந்தார் கல்சுமக்கும் படிசெய்த இந்தத்
தமிழ் நாட்டில் தமிழர்க்கோர் ஆதரவும் இல்லை;
தமிழறியார் ஆளுகின்றார் அதனாலித் தொல்லை,
தமிழ்அறிந்தார் ஆட்சியினைக் கண்டார் அந்
நாளில்!

கமழ்கின்றகருத் துண்டா இந்நாளில்? இன்று
கண்குழிந்த ஆளவந்தார், வடநாட்டின் அடியார்!
அமிழ்தேவா! தைப்பொங்கல் திருநாளே வாவா,
அகமகிழ்ச்சி கொண்டுவா எல்லார்க்கும் இங்கே!

ஏர்தட்டா துழுதுழுது பயன்விளைக்கும் உழவர்
எழில்நாட்டின் முகத்தினிலே அழகில்லை, நாட்டை
ஓர்தட்டாய்த் தட்டிபோய்த் தாம்வாழ எண்ணும்
ஆளவந்தார் செய்கையினால் உற்றதிந்தத் தொல்லை
போர்தட்டும் முரசொலிக்கத் தமிழ்நாட்டில் இந்நாள்
பொதுத்தொண்டு வெல்கவே வெல்கவே என்று
மார்தட்டி வந்தாய்நீ தைப்பொங்கல் நாளே
வறுமையறத் துன்பமற மகிழ்ச்சிகொண்டு வாவா!

இருட்கடலும் ஒளிக்கடலே! புதுப்பரிதி, முகத்தை
எதிர்காட்டி ஆயிரம்செங் கதிர்க்கைகள் நீட்டி
அருட்பெருக்கால் வருகின்றாய் ஆண்டுக்கோர் நாளே!
அன்னையே தமிழரெல்லாம் உன்னருமை மக்கள்!
பிரிக்கின்றார் எம்மையெல்லாம் யாம்பிரிய மாட்டோம்
பிழைசெய்தார் யாம்சிறிதும் பிழைசெய்ய மாட்டோம்
உருப்பட்டோம் உன்வரவால்! பொங்கலோ பொங்கல்!
உயர்வாழ்வு நிலைநிற்க! வாழியநீ வாழி.

# பொங்கலோ பொங்கல்!

(வண்ணம்)

தந்தாந தந்த—9 தந்தத்தத் தானா—1

பொங்கலோ பொங்கல்
பொங்கலோ பொங்கல்
என்றுபா டுங்கள்
மன்றிலா டுங்கள்
எங்கள்நா டெங்கள்
அன்புநா டென்று
நன்றுபா டுங்கள்
பொங்கியா டுங்கள்
பொங்கலோ பொங்கல்
பொங்கிற்றுப் பாலே!

தங்கமே தங்கம்
மண்டுநீ ரெங்கும்
இங்கும்வா னெங்கும்
நன்றுகா ணுங்கள்
மங்கைமார் மைந்தர்
நண்பரோ டன்பு
மிஞ்சியா டுங்கள்
சிந்துபா டுங்கள்
பொங்கலோ பொங்கல்
பொங்கிற்றுப் பாலே!

எங்கும் ஆதந்து
வந்தபா லுங்க
ரும்பினோ டும்க
லந்துமே பொங்க
நைந்தவா கும்ப
ழங்கள் தே னுங்க

லந்துவா னுங்க
மகிழ்ந்தவா றுண்ட
பொங்கலோ பொங்கல்
பொங்கிற்றுப் பாலே!

இங்குநா மின்று
கண்டபே ரின்பம்
என்றுமே கொண்டி
லங்குவோம் நம், பி
றந்தநா டும், கி
டந்த சீ ரும்பொ
ருத்தவே நன்று
மூந்தையோர் கண்ட
பொங்கலோ பொங்கல்
பொங்கிற்றுப் பாலே!

## வாழ்க தமிழர் திருநாள்

(வண்ணம்)

தனன தந்த தத்தத்தனந்த தனதானா
தனன தந்த தத்தத்தனந்த தனதானா
தனன தந்த தத்தத்தனந்த தனதானா தனதானா

தளையவிழ்ந்து செக்கச்சி வந்த மலர் போலே
தமிழ்நில ஞ்சி றக்கப்பு ரந்த இறைபோலே
தலைசிறந்த முத்தைச்சொ ரிந்த அலைமேலே
கதிர் காணீர்!

தவழ்குழந்தை கொட்டிப்பு ரிந்த நகைதானோ!
அழகுமங்கை நெற்றிக் கிருந்த ஒளிதானோ!
தகதகென்று பொற்றட்டெழுந்த வகையாதோ
அறிவீரோ?

இளையசெங் கதிர்க்குப்பரிந்து தொழுவாரே
இதுவிதெங்கள் தைக்குச்சிறந்த முதல்நாளே
எனவிளைந்த நெற்குத்தி எங்கும் மகிழ்வாரே
மடவாரே!

இலைமாங்கு ருத்துக்கள்தெங்கு கமுகாலே
எழிலுறும்செ ழிப்புற்றஎங்கள் தமிழ்நாடே
இசைஎழுந்து திக்கெட்டுமுந்தும் அதனூடே
மகிழ்வோடே!

வளமிகும்பு லத்திற்றிரிந்து வருமாடே
வகையொடுங்க லத்திற்கறந்து தருபாலோ
டரிசியும்சு வைப்புக் கரும்பு பிழிசாறோடோ
டனலாலே!

இனிதுபொங்க வைத்துக்கமழ்ந்த பொடியோடே
மலிவொடும்ப ருப்புச்சொரிந்த கனிதேனோ
அளவநன் றி றக்கிருந்திருந்தும் இளவாழை
இலைமேலே!

உளவிருந்தி னர்க்குப் பகிர்ந்து பரிவாலே
உடனிருந்து ணட்பெற் றடைந்த சுவையாலே
உளமகிழ்ந்த தைச்சற் றியம்ப முடியாதே
ஒருநாவால்!

உழவரன்பு ழைப்பிற் பிறந்த பருவாழ்வே
தழைக நன்றெ மைப்பெற்று வந்ததமிழ்தானே
தழைக எங்கள் வெற்றிக்குகந்த பெருநாளே
திருநாளே!

## உழவர் திருநாள்

உழவேதலை என்றுணர்ந்த தமிழர்
விழாவே இப்பொங்கல் விழாவாகும்! காணீர்
முழவு முழங்கிற்றுப் புதுநெல் அறுத்து
வழங்கும் உழவர்தோள் வாழ்த்துகின்றாரே!

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர் என்ற சொல்லிற்
பழுதுண்டோ? காணீர் பழந்தமிழர் ''நாங்கள்
உழவரே'' என்றுவிழ ஒப்பி மகிழ்ந்தாரே!

உய்யோமோ செங்கதிரே நீடுபனி ஓட்டிவந்த
தையே முதற்றிங்கள் தைம்முதலே ஆண்டுமுதல்
கையே துணையாகும் கைத்தொழிலே ஆக்கமென்று
செய்யே தரும்செந்நெல் சேயிழையார் குற்றினரே!

தேரிழுப்பும், செம்பெடுப்பும் அல்லவிழா! அன்ன-
வெல்லாம்
ஓரிழுப்புநோய்-பொதுவின் உள்ளவிழைவே விழா!
ஏரெழுப்பும் புத்தம், புதுச்செல்வம் இட்ட பால்
பாரழைக்கப் பொங்கற் பயன்மணக்கவைத்தனரே!

அழகின் பரிதி உயிர்; அவ் உயிரை
முழுதும் நிறுத்தும் அமிழ்துதான் முத்து
மழை! உலகுதாய்! வளர்ப்புப் பாலே பயன்! நெய்
ஒழுக உண்டார் பொங்கல் எல்லாரும் ஒன்றியே!

ஆடை எல்லாம் அந்நாள் மடிப்பு விரித்தவைகள்!
ஓடை எனப் பாலும், உயர் குன்றரிசியும்
வாடைநெய்யும் பொங்கி வழியவே பொங்கலிட்ட
நாடுதான் கொண்ட நனிமகிழ்ச்சி செப்பரிதே!

இகழ்ச்சி அணுகா நிலையில் அமிழ்தைப்
புகழ்ச்சி சொல்லிப் புத்துருக்கு நெய்யொழுகஉண்ட
மகிழ்ச்சியே இந்நாள் போல எந்நாளும் மல்க
மிக்சீ ரியதமிழும் மேன்மையுற்று வாழியவே!

## பொங்கல் நாளில் அவர்!

(சிந்து கண்ணிகள்)

செங்கதிர் எழுந்ததடி
எங்கும் ஒளி ஆனதடி
பொங்கல்திரு நாளடியே என்னருந் தோழி-அதோ
பொன்னரிவாள் ஏந்திவிட்டார் என்னருந்தோழி.

தெங்கில்இளம் பாளையைப் போல்
செந்நெல்அறுத் தார் உழவர்
அங்குக்களம் கொண்டடித்தார் என்னருந் தோழி-
அவர்
சங்கத் தமிழ் பாடிப்பாடி என்னருந்தோழி.

கட்டடித்தே நெல்லளந்தே
கட்டை வண்டி ஏற்றுகின்றார்
தொட்டளித்தார் தைப்புதுநெல் என்னருந்தோழி—
அவர்
தோளை வையம் வாழ்த்திறறடி என்னருந்தோழி,

கொட்டு முழக் கோடு நெல்லைக்
குற்றுகின்ற மாத ரெல்லாம்
பட்டுடை இழுத்துக் கட்டி
என்னருந் தோழி—பாடும்
பாட்டெல்லாம் வெல்லமடி
என்னருந்தோழி.

முத்தமிழ் முழக்கமடி
எங்கணும் இசைக் கருவி
முத்தரிசி பாலில் இட்டார்
என்னருந் தோழி—வெல்லக்
கட்டியுடன் நெய்யுமிட்டார்.
என்னருந் தோழி.

தித்திக்கும்தே னும்பலாவும்
செவ்வாழையும் மாம்பழமும்
ஒத்துக் கலந்துண்டா ரடி
என்னருந் தோழி-அவர்
ஒக்கலும் மக்களு மாக
என்னருந் தோழி.

எங்கணும் மகிழ்ச்சியடி
எவ்விடத்தும் ஆடல் பாடல்
பொங்கலோ பொங்கல் என்றார்
என்னருந் தோழி.

பொங்கிற்றடி எங்குமின்பம்
என்னருந் தோழி.

திங்களிது தையடியே
செந்தமிழ ரின்திருநாள்
இங்கிது போல் என்றைக்குமே
என்னருந் தோழி
இன்பம் நிலைகொள்ள வேண்டும்
என்னருந் தோழி.

## தங்கக் கதிர் வாழ்க!

(சிந்து கண்ணிகள்)

கங்குல்ப றந்ததடி எங்கும் வெளுத்ததடி
தங்கவெய்யில் கண்டதுகி ழக்கிலே-நம்
கையில் பயன்கொடுக்கத் தையும் பிறந்ததடி
காடெங்கும் கன்னல்ப ழக்குலை-நல்ல
களந்தோறும் விளைந்தநெல் அளந்தனர் உழவர்
கங்குல்ப றந்ததடி எங்கும் வெளுத்ததடி
தங்கவெய்யில் கண்டதுகி ழக்கிலே

கட்டாக ஏருழவர்
பட்டாளம் கிளம்பிற்றே—கட
கடவெனச் சகடுகள் கடந்தன தெருவை! (கங்)

எங்கும்பு துநெல்லடி எங்கும்உ லக்கையொடு
மங்கையர்கள் செந்தமிழில் பாடினார்-நல்ல
திங்கள் கிடந்ததுபோல் எங்கும் அரிசியடி
தீம்பாலில் இட்டதனை மூடினால்—மிகு
தித்திப்பிற்கொ தித்த அந்த முத்துக்கடல் பொங்
கிற்றடி
எங்கும்பு துநெல்லடி எங்கும்உ லக்கையொடு
மங்கையர்கள் செந்தமிழில் பாடினார்!

தென்னா டெல்லாம் பொங்கல்
பொன்னாய் விளைந்ததுவே பல
தெருவிலுந் தமிழிலும் கருவிகள் தருமிசை (கங்)

அங்கங்கு வந்திடும்வி ருந்தும்க லந்தபடி
அன்பும்சி றந்தபடி உண்டனர்—நமை
அண்டும் பகைவறுமை கண்டு நடுங்கும்படி
யான மனமகிழ்ச்சி கொண்டனர்—அவர்
ஆடுவதும் பாடுவதும் அரங்கினிற் றென்பாங்கே
அங்கங்கு வந்திடும்வி ருந்தும்க லந்தபடி
அன்பும்சி றந்தபடி உண்டனர்

தெங்கு கமுகு வாழை
சிறப்பினைச் செய்தன இளஞ்
சிறுவர்கள் சிறுமியர் நெறிதோறும் மகிழுவர்!
(கங்)

மங்கா மகிழ்ச்சியாலே மாடுகன்று கழுவிப்
பொங்கல்வி ருந்தளித்த அன்பிலே—அவை
அங்கு மிங்கும் ஓடக்கொங்குமலர் மாலை
ஆடிக் குலுங்கும் அவை கொம்பிலே இன்று
வாய்ந்த மகிழ்ச்சிஎன் றும் வாய்ந்தபடியே யிருக்க
மங்கா மகிழ்ச்சியாலே மாடுகன்று கழுவிப்
பொங்கல்வி ருந்தளித்த அன்பிலே நம்

வளநாட்டில் செந்தமிழே
வாழ்கவே வாழ்கவே மிகு
மனநல மொடுதமி ழர்கள் நலமுறவே! (கங்)

## புது நாளில் புது வாழ்வு

(சிந்து கண்ணிகள்)

பகற்பொழுதிற் பொங்கற் புதுப்
பாலை வாங்கி வருகையி லே
நகைத்தபடி என்னை அவன் பார்த்தான்—நான்
நாணத்தினால் உள்ளமெல்லாம் வேர்த்தேன்.

முகமறியாப் பெண் முகத்தில்
முத்துநகை வந்து மொய்த்தால்
மகளிரெல்லாம் என்ன நினைப்பார்கள்?—என்
மனநிலையில் ஐயமுங் கொண்டார்கள்.

சேவல் கூவக் — கீழ்க்கடலில்
செம்பரிதி தோன்ற—அந்த
நாவற்குள நீரெடுக்கச் சென்றேன்—அங்கு
நம்திருநாள் இன்றல்லவோ என்றான்.

காவலுண்டு பற்பல பேர்
காணலுண்டு காளையின் மேல்—
ஆவலுண்டு காட்டிக்கொள்ளவில்லை—அவன்
அகம் புகுந்தான் அதுமட்டுந்தான் தொல்லை.

நாட்டி லெங்கும் பொங்கல் வாழ்த்து
நடப்பதெலாம் தைத் திருநாள்
வீட்டினில் நான் பொங்கலுண்ணும் வேளை—அதில்
வெல்லமாய் விளைந்தான் அந்தக் காளை.

தோட்டத்திலோர் ஊஞ்சலிட்டுத்
தோகையரோ பாடுகையில்
பாட்டினில்ஓர் செந்தமிழும் ஆனான்—அந்தப்
பண்ணிலெல்லாம் நல்லிசையாய் ஆனான்.

ஆடலிலும் பாடலிலும்
அன்னவனே என்நினைவில்
கோடைமழை போற் குளிரச் செய்தான்—என்
கொள்கையிலே காதலினைப் பெய்தான்.

ஆடியபின் வீடு வரும்
அவ்விருண்ட தோப்பினிலே
ஓடிவந்தே கட்டி முத்தம் தந்தான்—அது
பொங்கல் திருநாள்அளித்த செந்தேன்.

## அன்பர் வருநாள்

(அறுசீர் விருத்தம்)

பொங்கல் நாள் வருக! கீழ்ப்பால்
புதுக்கதிர் எழுக வாழ்க!
இங் கெனைத் தனிவி டுத்தே
ஏகினார் வருவா ரன்றோ?
அங்கையிற் பெட்டி தூக்கி
ஆளிடம் மூட்டை தந்து
பெங்களூர்த் தெருக்க டந்து
பெரு வண்டி நிலையம் சேர்வார்!

தைவிழா வருக! கீழ்ப்பால்
புதுக்கதிர் தளிர்க்க! வாழ்க!
மெய் இங்கே உயிர்அங் கென்றே
சென்றவர் மீள்வார் அன்றோ?
உய் என்று சீழ்க்கை காட்ட
உட்கார்ந்த படிஎன் அன்பர்
தையலை எண்ண, மெல்லத்
தவழ்ந்திடும் புகைத்தல் வண்டி!

தமிழர் நாள் வருக! கீழ்ப்பால்
புதுக்கதிர் தழைக! வாழ்க!
அமிழ் தூறத்தழுவுந் தோளார்
அகன்றனர் வருவா ரன்றோ?
சுமை 'எரிமலை' ஒன் றங்குத்
தொடர்மலை இழுத்த தென்ன
இமைப்பிற்பக் கத்தூரில் வண்டி
இச்சிச் சென்றோடி நிற்கும்!

தைப் பொங்கல் வருக! கீழ்ப்பால்
தனிக் கதிர் எழுக! வாழ்க!
ஒப்பிலா அன்பர் என்றன்
உயிர்காக் கவருவா ரன்றோ?
இப் பக்கம்வரும்அவ் வண்டி
எதிர்ப்பக்கம் ஓடும் காடு
உட்பக்கம் பார்த்தால் வண்டி
ஓடும்! ஓடாது காடு!

உழவர் நாள் வருக! கீழ்ப்பால்
ஒளிச்செல்வன் எழுக! வாழ்க!
வழங்காமற் சென்றார் இன்பம்
வழங்கிட வருவா ரன்றோ?
முழங்கியே நிற்கும் வண்டி
முறுக் கோமப் பொடி ஆரஞ்சிப்
பழம்விற்பார்—செய்தித்தாள்தான்
பசிதீர்க்கும் அத்தா னுக்கே!

பாற்பொங்கல் வருக! கீழ்ப்பால்
பகலவன் எழுக! வாழ்க!
வேற்றாள் போல் சென்றார் அன்பு
விளக்காக வருவா ரன்றோ?
நேற்றேறி இருப்பார்! இவ்வூர்
நிலையத்தை அடைவார் இன்று!
நூற்றைந்து கூலியாட்கள்
நுழைவார்கள் கூலி என்றே!

பெரும்பொங்கல் வருக! கீழ்ப்பால்
புதுக்கதிர் பிறக்க! வாழ்க!
இரும்பு நெஞ்சத்தார் சென்றார்
இன்புறவருவா ரன்றோ!
திரும்பிய பக்க மெல்லாம்
தெரிந்தவர் காண்பார்! அத்தான்
பதிந்துகட் டணச்சீட் டீந்து
பின்புற முகப்பில் நிற்பார்.

திருவிழா வருக! கீழ்ப்பால்
செங்கதிர் எழுக! வாழ்க!
உருமழைத் துறைவார் என்றன்
உளம்பூக்க வருவார் அன்றோ?
தெருவெல்லாம் வண்டி நிற்கும்
நல்லதாய்த் தெரிந்து சத்தம்
ஒரு ரூபாய் பேசி, மூட்டை
யுடன்ஏறி அமர்வார் அத்தான்!

பொன்விழா வருக! கீழ்ப்பால்
புதுக்கதிர் எழுக! வாழ்க!
அன்பிலார் போற் பிறந்தார்
ஆர்வத்தால் வருவா ரன்றோ?
முன்னோக்கி வா என்பார் வண்
டிக்காரர்! முன்நகர் ந்தால்
பின்னோக்கிக் குதிரை போகும்
பிழை செய்தார் நெஞ்சம் போலே!

இனிக்கும்நாள் வருக! கீழ்ப்பால்
இளங்கதிர் எழுக! வாழ்க!
தனியாக்கிச் சென்றார் உள்ளம்
தவிர்த்திட வருவார் அன்றோ?
புனையப் பொங்கற் புத்தாடை
வாங்கிடப் போவார் அன்பில்
நனையத்தான் வேண்டும் என்பேன்
நன்மாலை வந்த தாலே!

## வாழிய செந்தமிழ்

(எண்சீர் விருத்தம்)

சிரித்தபடி புறப்பட்டான்! அவன் சிரிக்கச்
சிரித்தனவே மலரெல்லாம்! சோலையெல்லாம்!
ஒருத்தன் அவன்! அன்றன் றுபுதியன்! இந்நாள்
உவகைதரும் தைப்பொங்கல் நாளைச் செய்தான்!

விரித்தபடி புறப்பட்டான் ஒளியை; வாழ்வை
விளைத்தபடி எழுந்திட்டான் கடலின் மேலே!
தெருத்தோறும் தமிழர்விழா விளைக்கவந்த
சீரானை வாழ்த்திநாம் நீராடோமோ!

வானெல்லாம் ஒளியாக்கி வையத் துள்ள
மலையெல்லாம் கடலெல்லாம் வயல்க ளெல்லாம்
கானெல்லாம் மூவேந்தர் வழியில் வந்த
கடும்போரில் இடம்பெயராத் தமிழ்மக்கள்
ஊனெல்லாம் உள்ளத்தின் உள்ள மெல்லாம்
ஒளியாக்கி உயர்ந்தானை வாழ்த்தி வாழ்த்தித்
தேனெல்லாம் வண்டுண்டு யாழ்மி ழற்றும்
செந்தா மரைக்குளத்தில் நீராடோமோ.

(அறுசீர் விருத்தம்)

செங்கதிர் வாழ்த்தி மாதர்
செழும்புன லாடு கின்றார்!
அங்கோர்பால் நன்செய்ச் செல்வம்
அறுவடை செய்த டித்து
வங்காளக் கோணியிட்டு
மலைநிகர் மா டிணைக்கப்
பொங்கல்நாள் வாழ்க என்று
புறப்படும் புதுநெல்வண்டி.

இன்புறக் கூடந் தன்னில்
இறக்கிய மூடை கொட்டி
அன்புடன் பொங்கற் கென்றே
அளந்திடும் மணாளர் தோள்கள்!
மன்னுந்தோள் வாழ்த்தி அள்ளும்
மங்கைமார் மலர்ச்செங் கைகள்!
தென்பாங்கு பாடு கின்றார்
நெற்குற் றும் சேயிழை மார்!

### (பஃறொடை வெண்பா)

விந்தியத்தின் தென்பால்
விரிமுக் கடல் முழங்கும்
முந்தைத் தமிழர்
முதுநா டணிநகர்கள்,
சிற்றூர், தெருக்கள்,
திகழ்இல்லந் தோறுமே
குற்றிய தும்பைப்பூப்
போல் அரிசி கொண்டமட்டும்
ஆப்பயந்த பாலில்
அமிழ்தாகப் பொங்கிவரப்
பூப்பயன்வாய் மாதர்கள்
பொங்கலோ பொங்கலென்று
வெல்லம் நறுநெய்
விரைப்பொடியோ டிட்டிறக்கி
நல்லதேன் முப்பழங்கள்
நல்கி, விருந்தோடும்
உள்ளம் மகிழத் தாம்
அள்ளூர உண்பவர்,
வாழியர் எங்கள்
வளநாட்டுச் செந்தமிழர்!
வாழிய செந்தமிழ்' என் றார்!

## செங்கதிர் வாழ்க !

பொங்கற் புதுநாள் முகமலர்த்திப் பொன்னான
செங்கதிர்ச் செல்வன்திரைகடலின்மேலெழுந்தான்;
எங்கட்குப் புத்துயிரும் நல்கிப் பெருவாழ்வு
தங்கப் புரிந்த தகைமையினை வாழ்த்துவமே!

மூடு பனிவிலக்கி மொய்த்த குளிர்விலக்கி
நாடு நினைத்தளலாம் நன்கு தொழிற்படுத்தித்

தோடவிழ்த்துச் செம்பரிதி பொன்வெய்யில் தூவு
கின்றார்
வீடுமலி பொங்கல் விழாப்பாடி வாழ்த்துவமே!

சேற்றிற்செந் தாமரைபோல் செங்கதிர்க்க ருங்
கடலில்
தோற்றஞ்செய் தான்எங்கள் தோகையர்கள் நீராடி
மாற்றுப்பொன் னாடை மடிப்பு விரித்துடுத்தே
ஊற்றியபாற் பொங்கல் உவந்துவந்து வாழ்த்
துவமே!

அரும்பும் இளநகையார் அங்கங்கே செந்நெல்,
கரும்பு, கனிவாழை, தேன்நெய், தயிர்பால்
தரும்பயன்மேற் பொங்கும் தைப்பொங்கல் உண்ண
வரும்பரிதி நாம்பாடி வாயார வாழ்த்துவமே!

காடெல்லாம், நாடுநகர், வீடெல்லாம், வீட்டுமேல்
ஓடெல்லாம் பொன்னாக்கி ஆர்கலிமேல் உற்றகதிர்,
ஆடலினால் பாடலினால் ஆர்த்த பெரும் பொங்கல்
கோடல் மகிழ்ச்சியினால் கூடிநாம் வாழ்த்துவமே!

## வருவாய் கதிரே !

வருவாய் வருவாய் கதிரே—தை'ம்
மதியே ஒளியே வருவாய்
திருவே உணர்வே வருவாய்—எம்
செயலின் தெளிவே வருவாய்
இருளும் பனியும் குளிரும்—பல
இடரும் தொடரா வகையே
புரிவாய் சுடரே வருவாய்—எம்
பொங்கற் புதுநாள் வருவாய்!

விலகாப் பாசிப் பொய்கை—மிசை
விரியும் செந்தாமரை போல்
அலைசேர் நீலக்கடல் மேல்—கதிர்
அவிழும் பகலே வருவாய்
கலையின் முதலே வருவாய்—எம்
கண்ணின் மணியே வருவாய்
மலையும் காடும் தெருவும்—ஒளி
மருவப் புரிவாய் வருவாய்!

காவிரி ஆற்றுத் தண்ணீர் —எம்
கழனிகள் தோறும் பாய்ச்சி
ஆவலின் நாட்டைப் பாடி—நல்
அடைவுறும் எருதால் உழுதே
தூவிய விதையும் காத்தோம்—வயல்
சுற்றிலும் வேலி அமைத்தே!
ஆவன செய்தோம் மடைநீர்—வடி
வாக்கித் தேக்கியும் வந்தோம்!

ஆழக் கிடங் கெடுத்தே—நிறை
வாகத் தண்ணீர் தேக்கி
வாழை, கரும்பு, நட்டோம்—கால்
வைத்தே சாரம் செய்தோம்
தாழப் புதைத்த மஞ்சட்—பயிர்
தழையத் தழையக் காத்தோம்;
வாழ்வின் பயனைக் கோரி—உன்
வரவை நோக்கி யிருந்தோம்!

வருவாய் வருவாய் சுடரே—பனி
மாற்றித் தோன்றிய மணியே
புரைதீர் வாழ்வின் பயனே—யாம்
புதுநெல் அறுவடை செய்தோம்
கரும்பு வெட்டிச் சேர்த்தோம்—செங்
கனியோடு வாழை சாய்த்தோம்
திரும்பும் இடம் எங்கெங்கும்—நல்
திருவே புரிவாய் வருவாய்!

எருமைக் கண்போல் நாவற்—கனி,
இலந்தை, மாதுளை, கொய்யா,
பெருமுந்திரியின் பருப்பும்—தேன்
பிழிவும் யாண்டும் கொழியும்!
மருவின் கொழுந்தும் மலரும்—மணம்
மருவத் திருவே வருவாய்
வருவாய் வெயிலே அழகே—எம்
வாழ்த்துக் குரியோய் வருவாய்;

புதுநெல் லரிசியினோடு—பால்
பொங்கல் பொங்கிட எங்கும்
அதிர்வளை மங்கைமார்கள்—தம்
அன்பும் தேனும் கலந்து
முதிரா வழுக்கை இளநீர்—நனி
முற்றற் கழையின் சாறும்
உதிர்மா துளையின் முத்தும்—தந்
துவக்க உவக்க நின்றார்!

பொன் வண்ணப்புத் துருக்கு—நெய்
புறங்கை ஒழுகப், பொங்கல்
இன்பம் பெறுமா றுண்போம்—எம்
இனிதாம் பொழுதே வருவாய்
சொன்னோம் பொங்கல் வாழ்த்தே—எம்
தூய்மைத் தமிழால் நாங்கள்
தென் பாங்கடைந்த செல்வம்—எம்
திராவிடம் வாழிய நன்றே!

## பொங்கல் விழாவில் சிறுவர் சிறுமியர்

### பொன்னூசல்

பொன்னூசல் எல்லோரும் ஆடுவமே—நல்ல
பொங்கற் புதுநாளைப் பாடுவமே
தென்னாடு வாழிஎன் றாடுவமே—நல்ல
செம்பரிதி வாழிஎன் றாடுவமே! (பொ)

கன்னடம் தெலுங்குமலை யாளம் துளுவம்—நல்ல
கன்னல்நிகர் செந்தமிழும் ஒன்றென்றே
மன்னிய திராவிடர்கள் எல்லோரும்—பிறர்
வந்தசைக்க ஒண்ணாத குன்றென்றே! (பொ)

சந்தனப் பொதிகைமலை எங்கள் உடைமை-வெண்
சங்கெறியும் தென்குமரி எங்கள் உடைமை
வந்தசைக்க ஒண்ணாத மறவர் நிலம்—நல்ல
வங்கம்வரை எங்கள்நிலம் வாழிய என்றே! (பொ)

முத்தெடுக்கும் மூன்றுகடல் நட்டநடுவில்—நல்ல
முல்லைமரு தம்குறிஞ்சி நெய்தல் கிடந்தே
மெத்தநலம் செய்திடும் திராவிடநிலம்—நன்கு
வெல்கவெல்க வெல்கவெல்க வெல்கஎனவே!
(பொ)

## பந்தாடல்

(எடுப்பு)

பொங்கல் திருநாளில் பூப்புனை பந்தாடிச்
செங்கதிர் வாழ்த்திடுவோம்—நாம்
செங்கதிர் வாழ்த்திடுவோம். (பொ)

(உடனெடுப்பு)

தங்கவெயில் ஒளிதன்னில் குளிப்போம்—செந்
தமிழில்பாடி உள்ளம் களிப்போம் (பொ)

(அடிகள்)

அங்கங்குப் பாடல்களும் அங்கங்கு நல்லிசையும்
அள்ளூறச் சொல்லுகின்ற போது—இங்
கெங்கும் நறும்புகையும், பூவுங்கலவையும்

ஏறிக் கமழும் விண் மீது
சங்கை அலையெறியும் தண்கடல் நாட்டிலே
தாம்தாம் தாம்என்றே நாமும்குதித்தே. (பொ)

விட்டெறிந்த பூப்பந்து சிட்டாய்ப் பறந்ததுகண்
எட்டாத உயரத்தில் சென்றே—நம்
பட்டாடை பறக்கக் கூந்தல் பறக்கமுற்
பட்டுப் பிடிப்போம் அதைநன்றே.
கட்டாணி முத்துநகை மங்கையரே கைப்பந்து
கட்டுத் தளரும்வகை விட்டடிப்போம்தொடர்ந்து.
(பொ)

## பொங்கல் விளையாட்டு

தையும் பிறந்தது நன்றாம்—நாம்
தைதை தைஎன்றாடு கின்றோம்
வைஇங்குப் பொங்கலை என்றோம்—நாம்
வாயார அள்ளி உண்கின்றோம்.

நெய்யில் மிதக்கின்ற பொங்கல்—பால்
நிறைய வார்த்த புதுப் பொங்கல்
செய்யில் விளைந்த முத்தரிசி—நறுந்
தேனாய் இனிக்கின்ற பொங்கல்.

முந்திரிப் பருப்புமிட்ட பொங்கல்—கொடி
முந்திரிப் பழங்களிட்ட பொங்கல்
சிந்தாமல் கையில் அள்ளும்போதே—வாய்
தித்திக்கும் சர்க்கரைப் பொங்கல்.

இந்த மட்டுந்தானா சேதி?—பார்
இவ்வளவு செங்கரும்பு மீதி.
முந்தி இதில் நீயும் ஒருபாதி—எடு
மொய்த்திருக்கும் எறும்பினை ஊதி.

## திராவிடர்க்குப் பொங்கல் வாழ்த்து

*(எழுசீர் விருத்தம்)*

பொங்கிற்றுப் பால் இனிது!
குழைந்தது முத்தரிசி
புத்துருக்குநெய் புறங்கை ஒழுகத்
தங்கத்தைத் தூவு கதிர்
வாழ்த்தியே பாற் பொங்கல்
தைத்திரு நாளில் உறவுடன் உண்பீர்
இங்கிந்த நாள்போல
என்றுந் திராவிடர்
இடர்கள் நீங்கி விடுதலைஎய்தி
வங்கத்தை முக்கடலை
மறவர்தோள் காத்திட
வந்திடும் புகழ்க்குலம் மகிழ்ந்து வாழியவே!

## திராவிடர் மீட்சி

*(எழுசீர் விருத்தம்)*

ஒன்றுநம் உள்ளம்; ஒன்றுநம் மகிழ்ச்சி;
ஒன்றுநாம் உண்டதீம் பொங்கல்;
ஒன்றுநாம் அனைவரும்; ஒன்றுநம் உறவும்
உணர்ந்தனம் பொங்கல் நன் னாளில்!

இன்றுபோல் என்றும் இன்பம் ஓங்கிடுக!
இன்பத் திராவிட நாட்டை
நன்றுநாம் மீட்க உறுதிமேற் கொள்வோம்!
நனிவாழ்க திராவிட நாடே!

## ஐந்தாம்படை அழிக

அமிழ்தென்று தைப்பொங்கல் உண்டோம்இந் நாளே
தமிழென்று போர்தொடுப்போம் தாவி —நமை நலிப்பார்
உள்ள பகைவரல்லர்; உட்பகையே ஆம் என்றே
உள்ளுக வாழ்க உயர்ந்து.

## வாழிய பொங்கல் நற்றிருநாள் !

(எழுசீர் விருத்தம்)

வாழிய வாழிய திராவிட மக்களே!
வாழிய பொங்கல்நற் றிருநாள்!
வாழிய தமிழாம் திராவிட நன்மொழி!
வாழிய திராவிடர் உரிமை!
ஏழியல் நரம்பின் யாழுநல் லிசையும்
என்னவே தலைவியர் தலைவர்
சூழுறு காதல்இன்பத் தியைந்த
தூயவாழ் வோங்குக நன்றே.

## வாழ்த்து

(வெண்பா)

வெல்க தமிழர்! மிகஓங்க செந்தமிழ்தான்!
வெல்க தமிழர் விடுதலை!—பல்க
தமிழர் அறமே! தனித்துயர்க யாண்டும்
தமிழர்நல் வாழ்வு தழைத்து.

## பொன் கொடிக்குப் பொங்கல் வாழ்த்து

(எடுப்பு)

திராவிட நாட்டு மணிக்கொடிக்கே நாம்
பெரும் பொங்கல் வாழ்த்துரைப்போம். (தி)

(உடனெடுப்பு)

கருமுகில் கருங்கடல் பரப்பினில் மாணிக்கப்
பரிதி முழுவட்டம் ஒளிசெய்தல் போன்ற (தி)

(அடிகள்)

திருவும் திருவும் அரிய செயல்களும் ஓங்குக
திராவிட நாட்டினில் எங்கும்!
அருவியைப் போலும் அறிஞரின் உள்ளம்
அழகிய நூல்பல நல்க!
திரைகடல் மூன்றொடு வங்க வடக்கெல்லை
சேரும் திராவிடநாடு செழித் தோங்க. (தி)

பொங்கற் புதுநாளைத் தோற்றி எழுந்த
பொன்வெயில் வாழிய நன்றே!
தெங்கு, கமுகு, செங்கரும்பும் விளைக! நன்
செய்யும் வளங் கொழிக்க என்றும்
எங்கள் விடுதலை மறுப்பவர் ஒழிக
இன்பத் திராவிடம் வாழிய நன்றே! (தி)

## பொங்கற் பாட்டு

பொன்னோ, பொன் ஏடவிழ்ந்த
பூவோ "எழுந்தகதிர்"
தென்னாடு பூரித்தது தோழி—இருள்
சென்றே மறைந்த தென்ன தோழி?

இன்னாத ஆட்சி எனில்
வாழாது வாழிய நம்
தென்னாட்டு விடுதலை தோழா—புதுச்
செம்பரிதி பூரித்தது தோழா.

தைப்பொங்கல் இன்பம்
தரும்பொங்கல் உண்டாடப்
பொற்பந்தல் வானோடு தோழி—கதிர்
போடும் வியப்பென்ன தோழி?

முப்பாங்கும் ஆழாழி
முன்விந் தியக் குன்றின்
இப்பாங்கு நம் ஆட்சி தோழா—கதிர்
இட்டான் விழாப் பந்தல் தோழா.

செந்நெல் அடித்ததுவும்
செங்கரும்பு வெட்டியதும்
பொன்னங் கதிர் விளைவு தோழி—பால்
பொங்கிவரும் பொங்கலென்ன தோழி?

தன்னலம் நீக்கி! நல்ல
தைப் பொங்கல் இட்டே வரும்
தென்பாங்கு பாடுவதில் தோழா—இன்று
சேர்ந்தின்பம் எய்திடுவர் தோழா.

மூடுபனிப் பகையின்
மூட்டறுத்துக் கீழ்க்கடலில்
பாடி எழும்பரிதி தோழி!—அந்தப்
பாட்டுக்குப் பொருளென்ன தோழி?

கூடு திறந்திடவும்
கொஞ்சு தமிழ்க் கிளிகள்
காடு பழம்பழுக்கத் தோழா—மிகக்
'கிண்ணா யிருக்க' என்னும் தோழா!

ஆவின் நறும்பால், நெய்
யாழியுள் முத்தரிசி
தூவும் பருப்பேலம் தோழி—வெல்லம்
தோய்ந்த சுவைப் பொங்கலென்ன தோழி?

நாவலந் தீவினிலே
நம்கல்வி நம்ஒழுக்கம்
தேவைசிறந்த வென்று தோழி—நன்கு
செப்புவது தைப்பொங்கல் தோழா!

தேனோடு முக்கனிகள்
தென்னாட்டுப் பண்ணியங்கள்
ஏனோடி பொங்கலுடன் தோழி—சுவை
ஏற்றி நுகந்தார்கள் தோழி?

மீனோடு வில் புலியும்
மேவு கொடி மூவரசின்
மேனாள் சுவையுணரின் தோழா—நமை
விட்டுப்பிரிந்திடு மோ தோழா!

எல்லார்க்கும் நல்லாடை
எல்லார்க்கு மே பொங்கல்
இல்லாமையே இல்லை தோழி—எனில்
என்றைக்கும் வாய்க்குமோ தோழி?

பொல்லாத ஆட்சியினைப்
போக்கித் திராவிடரின்
செல்வாக்கில் இற்றைநிலை—தோழா
தேயாது செய்திடுவோம் தோழா.

எங்கும் மகிழ்ந்தாடி
இன்பத் தமிழ் பாடி
மங்கையர் ஆடவர் தோழி—இன்ப
வாழ்விற் பொலிந்தனர் என் தோழி?

அங்கங்குப் பொன்னூசல்
அங்கங்குக் கச்சேரி
பொங்கலோ பொங்கல் என்தோழா—பாற்
பொங்கல் நாள் வாழ்க என்தோழா!

பொங்கற் பாட்டுகள் முற்றும்

# இளையார் ஆத்திசூடி

# பாரதிதாசன் இளையார் ஆத்திசூடி

ஏறத்தாழ இருபதாண்டின் முன் 'பாரதிதாசன் ஆத்திசூடி' வெளியிடப் பெற்றது.

இவ்விளையார் ஆத்திசூடியைப் பாவேந்தர் இயற்றியது 1963-ஆம் ஆண்டில்!

முன்னது முதிர்ந்தவர்க்கு என்பதால் மாணவர் பயிலும் வகையில் இந்த அறவுரைகளை ''இளையார் ஆத்திசூடி'' யாக்கினார் பாவேந்தர்.

ஆசிரியரும் மாணவரும் நாடோறும் இவற்றைப் பயிற்றுவிக்கவும் பயிலவும் 'குயில்' வெளியிடுகின்றது.

பாவேந்தர் பாடல்களைப் பயின்றால் மட்டும் போதாது; பயின்ற வண்ணம் நடந்தும் காட்டுவதே நன்று என்பது நம் கருத்து.

(பாரதிதாசன் குயில்—10–6–1967 குரல்-1 ; , இசை—2)

இளையார் ஆத்திசூடி இயம்பக்
களையார் தமிழ்த்தாய் கருத்தில் அமைகவே!

# இளையார் ஆத்திசூடி

1. அழுபவன் கோழை
2. ஆவின் பால் இனிது
3. இரவினில் தூங்கு
4. ஈவது மகிழ்ச்சி
5. உள்ளதைப் பேசு
6. ஊமைப்போல் இராதே
7. எதையும் ஊன்றிப் பார்
8. ஏசேல் எவரையும்
9. ஐந்திற் கலை பயில்
10. ஒற்றுமை வெல்லும்
11. ஓரம்போ தெருவில்
12. ஔவை தமிழ்த்தாய்
13. கணக்கில் தேர்ச்சிகொள்
14. சரியாய் எழுது
15. தமிழ் உன் தாய்மொழி
16. நல்லவனாய் இரு
17. பல்லினைத் தூய்மை செய்
18. மற்றவர்க் குதவி செய்

19. வண்டி பார்த்து நட
20. கல்வி கற்கண்டு
21. கால் விலங்கு கல்லாமை
22. கிழிந்தாடை தீது
23. கீரை உடற்கினிது
24. குப்பை ஆக்காதே
25. கூனி நடவேல்
26. கெட்ட சொல் நீக்கு
27. கேலி பண்ணாதே
28. கைத்தொழில் பழகு
29. கொடியரைச் சேரேல்
30. கௌவி உமிழேல்
31. சமமே அனைவரும்
32. சாப்பிடு வேளையொடு
33. சிரித்துப் பேசு
34. சீறினாற் சீறு
35. செக்கெண்ணெய் முழுகு
36. சேவல்போல் நிமிர்ந்து நில்
37. சை என இகழேல்
38. சொல்லை விழுங்கேல்
39. சோம்பல் ஒரு நோய்
40. தந்தை சொற்படி நட
41. தாயைக் கும்பிடு
42. தின்பாரை நோக்கேல்
43. தீக் கண்டு விலகி நில்

44. துவைத்ததை உடுத்து
45. தூசியாய் இராதே
46. தென்னையின் பயன்கொள்
47. தேன் ஈ வளர்த்திடு
48. தைப் பொங்கல் இனிது
49. தொலைத்தும் தொலைத்திடேல்
50. தோற்பினும் முயற்சி செய்
51. நரிச் செயல் கான்றுமிழ்
52. நாட்டின் பகை தொலை
53. நினைத்ததை உடன் முடி
54. நீந்தப் பழகு
55. நுணல் வாயாற் கெடும்
56. நூல் பயில் நாடொறும்
57. நெல் விளைத்துக் குவி
58. நேரம் வீணாக்கேல்
59. நைந்த தறுந்திடும்
60. நொய்யும் பயன்படும்
61. நோய் தீயொழுக்கம்
62. பனைப்பயன் பெரிது
63. பாட்டிக்குத் தொண்டு செய்
64. பிறர்நலம் நாடு
65. பீளை கண்ணிற் கொளேல்
66. புற்றிற் கை விடேல்
67. பூச்செடி வளர்த்திடு
68. பெற்றதைக் காத்தல் செய்
69. பேராசை தவிர்
70. பையும் பறிபோம்
71. பொய் பேசாதே
72. போர்த் தொழில் பழகு

73. மாடாடு செல்வம்
74. மிதியொடு நட
75. மீன் உணல் நன்றே
76. முத்தமிழ் முக்கனி
77. மூத்தவர் சொற்கேள்
78. மெத்தெனப் பேசு
79. மேலவர் கற்றவர்
80. மையினம் காத்தல் செய்
81. மொழிகளில் தமிழ் முதல்
82. வள்ளுவர் நூல் பயில்
83. வாழ்ந்தவர் உழைத்தவர்
84. விடியலிற் கண்விழி
85. வீரரைப் போற்று
86. வெல்லத் தமிழ் பயில்
87. வேர்க்க விளையாடு
88. வையநூல் ஆய்வு செய்

—முற்றும்—



பாரதிதாசன்

பாரதிதாசன் எதையும் ஆவேசத்தோடும், உணர்ச்சியோடும். பாடுபவர். கவிஞரின் சிந்தனையும் மொழியும் வாழ்க்கையை விரிவாக்குவன. கற்பனையும் யதார்த்தமும் கலையின் தொண்டுக்குப் பகுத்தறிவின் வழிக் கொண்டு வருபவர்.

பாரதி, பாரதிதாசனுக்குப் பழகு தமிழின் பண்பைக் காட்டினார். பாரதிதாசன் பழகு தமிழின் பாட்டில் பாட்டாளிகட்கும் உலக மக்கட்கும் சிந்தனைக்கனலை மூட்டினார். கலையை வாழ்க்கையின் வழிகாட்டியாக்கிய பெருமை புரட்சிக் கவிஞருக்கே உண்டு.

காதல் இயற்கை, சமூகம், பொதுவுடைமை எல்லாமே கவிஞரின் மொழியில் புத்துருக் கொள்கின்றன.

T18
R004

**பூம்புகார் பதிப்பகம்**
**63, பிராட்வே, சென்னை-600 108**